மலர் - 04 இதழ் - 03 செப்டம்பர் 2026

தமிழனங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

தெற்காசியாவின்
பெர்னாட்ஷா

தமிழ் நாட்டின் முன்னாள்
முதலமைச்சர்

பேரறிஞர்

அண்ணா

- **உணவுப் பொருளாதாரம்**
  முனைவர் ச.அய்யம்பிள்ளை
- **சோவியத் திராவிடவியல் அறிஞர் அலெக்சாண்டர் மிகைலோவிச் மெர்வார்ட்**
  முனைவர் தேமொழி
- **மொழிபெயர்ப்பில் பொருள் வகைகளும் சிக்கல்களும்**
  முனைவர் செ ராஜேஸ்வரி
- **துடி, தமருகம், உடுக்கை**
  டாக்டர் இரா. கலைக்கோவன்
- **இத்தாலிய மொழியில் திருக்குறள் கவிதைகள்**
  Bp Dr J இரவிக்குமார் ஸ்டீபன் G
- **அறிஞர் அண்ணா: அடிச்சுவட்டில்**
  நூலகர் மு. பழநிச்சாமி
- **சங்ககாலத் தமிழர்களின் மரபணுவரலாற்றைத் தேடும் புதிய ஆய்வு**
  அ. திவ்யகுமாரி கண்ணம்மா

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் – 04 | இதழ் – 03
செப்டம்பர் 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
ஜெஸிலெட் M.A., NET.,

செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by:
E. Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madurai – 625 018,
Tamil Nadu.
Ph: +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப:

rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் சொந்தக் கருத்துகளாகும். அவற்றிற்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

– இதழாசிரியர்

உள்ளடக்கம்

1. **உணவுப் பொருளாதாரம்**
முனைவர் ச.அய்யம்பிள்ளை 3

2. **பகுத்தறிவுப் பாசறையின் சுடரொளி திருச்சி வே. ஆனைமுத்து**
டாக்டர் புதேரி தானப்பன் 10

3. **எளிய முறையில் யாப்பறிவோம்**
நெருப்பலையார் இராம இளங்கோவன் 13

4. **கடலினும் பெரிய கண்கள், அம்ம !**
டாக்டர் அண்ணாமலை சுகுமாரன் 18

5. **சோவியத் திராவிடவியல் அறிஞர் அலெக்சாண்டர் மிகைலோவிச் மெர்வார்ட்**
முனைவர் தேமொழி 22

6. **மொழிபெயர்ப்பில் பொருள் வகைகளும் சிக்கல்களும்**
முனைவர் செ ராஜேஸ்வரி 26

7. **துடி, தமருகம், உடுக்கை**
டாக்டர் இரா. கலைக்கோவன் 39

8. **இத்தாலிய மொழியில் திருக்குறள் கவிதைகள்**
Bp Dr J இரவிக்குமார் ஸ்டீபன் G 52

9. **அறிஞர் அண்ணா: அடிச்சுவட்டில்**
நூலகர் மு. பழநிச்சாமி 53

10. **சங்ககாலத் தமிழர்களின் மரபணுவரலாற்றைத் தேடும் புதிய ஆய்வு**
அ. திவ்யகுமாரி கண்ணம்மா 57

11. **பேச்சாகவா பேசினார் அண்ணா**
முனைவர் சிவ இளங்கோ 62

12. Valluvar's guide to mindfulness
Dr. C. Rajeswari 69

13. **TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor**
Dr. C. Rajeswari 72

14. **மங்கல அணி**
ஜனக்புரி சீனிவாசன் 77

பேரறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோய் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்த நிலையில், தந்தை பெரியாருக்கு ஆறுதல் கூறி எழுதிய மடல்!



அமெரிக்காவிலிருந்து அண்ணன் எழுதிய அஞ்சல்

பேரன்புடைய பெரியார் அவர்கட்கு, வணக்கம்.
என் உடல்நிலை நன்றாகவே முன்னேறி வருகிறது.
வலியும் வருத்தும் வகையாக இருந்தது ஒரு சில
நாட்களும் கிட்டத்தட்ட முடிந்து விட்டன. பகலில் எவரும்
சிறிதும் இடைஞ்சல் தருவதில்லை. மாலை மட்டும்
நண்பர்கள் சிலர் வந்து பார்த்துப் பேசிவிட்டுப் போகிறார்கள்.
முன்பு வாரம் புறப்பட வேண்டியிருந்தது. இன்று நான்,
பிரபாகரன், செழியன், மாதவன், டாக்டர் வரதன் ஆகியோர்
உடனிருந்து கவனித்துக் கொள்கிறார்கள். கொண்டு வந்துள்ள
துணிகளும் நமக்கு சுகமுடனும் வசதியுடனும்
இருந்து வருகிறோம். திரும்பவும் என்ன தொந்தரவுப்பட
வேண்டியது. அதற்கே வசப்பட வேண்டியதிட
முடிந்தது. நியூயார்க்கிலிருந்து விமானத்தில் தெரிந்த
நண்பர்கள் சிலர் வந்து பார்த்தார்கள். நமக்கு
பிரார்த்தனை மலர் கொடுத்தார்கள், மனம் கோணாமல்
அவர்களிடம் பேசினேன். எனக்கு எதிரிலிருந்து
இரண்டு பேர்களும் கவலைப்பட்டு நமக்கு பல, பலவிதமான
விதிமுறைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.
புதிய நோய் பரவுவதற்கு இடந்தரக் கூடாது. நான்
அறிந்த வரையில், இந்தியாவைவிட வேறு வெளிநாடு
இதற்கு இடந்தருவதில்லை. அதனும் முதலாட்டும்.
ஆகவே அஞ்சற்க, கவலையை அறவும் நமக்கு கொஞ்சமும்
தேவையில்லை. என் உடல்நிலை குறித்து தினமும் எனக்கு
அவ்வப்போது தெரிவிக்கவும். அன்பு வணக்கங்கள்.

நமது அன்புள்ள

அண்ணாதுரை.

நியூயார்க்
10/10/68

உணவுப் பொருளாதாரம்

முனைவர் ச.அய்யம்பிள்ளை, மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி



உணவு, உடை, உறையுள் ஆகியவைதான் மனிதனின் அடிப்படைத் தேவைகள் எனச் சொல்லப்படுவதை அநேகரும் அறிவோம். "பசி வந்தால் பத்தும் பறந்துபோகும்" என்பார்கள். நாம் உயிர் வாழ உணவு முக்கியம் என்பதில் ஐயமில்லை. நம் உணவுப் பொருள்கள் பற்றியும் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்யும் வேளாண் துறை பற்றியும் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக, நம் கவனத்தை ஈர்க்கிற பல வினாக்களும் மாற்றங்களும் வந்துள்ளன. அவற்றுள் உணவுப் பொருள்கள் உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைந்துவிட்டோமா? வேளாண் துறை சந்திக்கும் சவால்கள் யாவை? விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர என்ன செய்யவேண்டும்? அதில் நம் அரசின் பங்கு என்ன? போன்ற வினாக்கள் அடிக்கடி ஊடகங்களில் விவாதிக்கப்படுகின்றன. இருப்பினும், சரியான விளக்கங்கள் இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றன.

உணவுப் பொருள்கள் தரும் விவசாயத்துறை பாராட்டப்படுவதை நாம் காணலாம். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"; "ஏர் முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லை"; "அகல உழுவதைவிட ஆழ உழ்வதே நன்று"; கிராமமே (விவசாயமே) இந்தியாவின் முதுகெழும்பு"; "நம் உணவுக்கும், உடைக்கும் தேவையான ஆதாரப் பொருள்களை விவசாயமே அளிக்கிறது" போன்ற சொற்றொடர்கள் அடிக்கடி நம் காதுகளில் விழுகின்றன.

ஆனால் இவற்றையெல்லாம் இன்றைய இந்திய இளைஞர்கள் ஒத்துக்கொள்வார்களா என்று கேட்டால், சந்தேகம்தான். ஏனெனில், இன்று விவசாயத்துறை பல காரணங்களினால், மதிப்பிழந்து நிற்கிறது. வேளாண் துறையை அதிகமாக நம்பியிருக்கும் மக்களுக்கு சமூகத்தில் அந்தஸ்து அளிக்கப்படுவதில்லை. வேளாண்துறையை நம்பியிருக்கும் குடும்பங்களோ, மாவட்டங்களோ, மாநிலங்களோ, நாடுகளோ பொருளாதார வளர்ச்சி அடைய

முடியாமல் திண்டாடுகின்றன. தொழில் மற்றும் சேவைத்துறையில் சிறப்பாகச் செயல்படுவது வளர்ச்சிக்கு அவசியமாகிறது; அவற்றை நோக்கித்தான், மூலதனம், நிலம், மனித உழைப்பு, அறிவியல் கண்டுபிடிப்புக்கள் ஆகியவை நகர்ந்துகொண்டு உள்ளன.

இயற்கை வளங்களான நீர், காடுகள், வெள்ளி, தங்கம், வைரம், நிலக்கரி, செழிப்பான நிலம் மற்றும் வேளாண்மை அதிகமாகக் காணப்படும் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய பகுதிகளில்தான் உலகின் தொண்ணூறு

சதவீத ஏழை மக்கள் வசிக்கின்றனர். உணவு உற்பத்தி அதிகமாகி இருந்தாலும், அதிகமானோர் வேளாண்மையில் ஈடுபட்டு இருந்தாலும், பொது விநியோக முறையில் உணவு தானியங்கள் வழங்கப்படும் போதிலும் சரியான, போதுமான சத்தான உணவுப்பொருள்கள் பெற முடியாமல் பல குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. ஊட்டச் சத்தின்மை, குழந்தைகளின் குன்றிய வளர்ச்சி, இரத்த சோகை போன்றவை பரவலாகக் காணப்படும் பிரச்சனைகளாகும். இங்குள்ள நாடுகள் தொடர்ந்து "பின்தங்கிய நாடுகளாகவே" அறியப்படுகின்றன. உதாரணத்திற்கு, இந்தியாவின் தலைவீத வருமானம் உலகில் உள்ள நூறு நாடுகளின் தலைவீத வருமானத்தைவிடக் குறைவாகவே உள்ளது. நம் நாட்டில், தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களின் தலைவீத வருவாயைவிட, விவசாயம் மேலோங்கி இருக்கும் மாநிலங்களின் தலைவீத வருவாய் குறைவாகவே உள்ளது.

ஏன் இந்த நிலை?

பல பயனுள்ள ஆய்வுகளை மேற்கொண்ட ஜகதிஸ் பக்வதி (Jagdish Bhagwati) என்னும் பொருளாதார அறிஞர் இது தொடர்பான சில கருத்துக்களை முன் வைக்கிறார். அவை:

முதலாவதாக, வேளாண் பொருள்களை நீண்ட காலம் சேமித்து வைக்க இயலாது; அவை

விரைவில் அழுகிவிடும். சேமித்துவைக்க இடம் அதிகம் வேண்டும். நம் நாட்டில், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மற்றும் கோதுமை மழையிலும் வெய்யிலிலும் திறந்த வெளியில் கிடப்பதை எளிதாகக் காண முடியும். உணவு தானியங்கள் சேமிப்புக் கிடங்குகளில் நீண்ட நாட்களாக பாதுகாப்பின்றி கிடந்து வீணாவதையும் காணலாம். குளிர்சாதன வசதியில்லா கிடங்குகளில் பழங்களும் பாதுகாக்கப்படாமல், சுமார் இருபத்தைந்து சதவீதம் வீணாகின்றன; இது ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் ஓராண்டின் மொத்த நுகர்வுக்குச் சமம். விழாக்காலங்களில் விழாக்கள் நிகழும் இடங்களில் உணவுப் பொருள்களை விரயம் செய்வதிலும் நாம் சளைத்தவர்கள் இல்லை. தேவைக்கு அதிகமாக உண்போரும் பலர். பசிவர அங்கே மாத்திரைகள்; பட்டினியால் இங்கு யாத்திரைகள் எனும் பாடல் வரி ஒன்றும் உள்ளது.

இரண்டாவதாக, வருமானம் உயரும்போது, உணவுப் பழக்கத்தில் மாற்றம் வரும். தானிய நுகர்வில் இருந்து, பால், பழம், முட்டை, மீன், இறைச்சிக்கு மாறி, பதப்படுத்தப் பட்ட, பதனிடப்பட்ட பொருள்களின் நுகர்வு கூடும். உணவுக்காகச் செய்யும் செலவு குறைந்து, பிற செலவுகளான மருத்துவம், கல்வி, போக்குவரத்து, பயணம், பொழுதுபோக்கு, ஆடம்பரம் போன்றவை அதிகரிக்கும்.

மூன்றாவதாக, வேளாண் அல்லாத பிற துறைகளில் அதிக இலாபம் சம்பாதிக்க முடியும் என்கிற சூழல் உள்ளது. எனவே, உணவுப் பயிர்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகிற நிலத்தின் அளவு, மூலதனம், மனித உழைப்பு ஆகியவை குறைகிறது.

அறிவியல் மற்றும் தொழில் துறைகளில் வளர்ந்த நாடுகளில் வேளாண் துறையில் ஈடுபட்டுள்ள மக்கள் ஐந்து முதல் பத்து விழுக்காடுதான். அவை செல்வமிக்க நாடுகளாக உள்ளன. அந்த நாடுகளில் வேளாண்துறைக்கு அளிக்கப்படுகிற தொழில் நுட்பங்களும், மானியங்களும், கட்டமைப்பு வசதிகளும், இந்தியாவை ஒப்பிடுகையில், பன்மடங்கு அதிகம். இந்தியாவில் விவசாயிகளுக்கு அதிகமாக உதவிகளை அரசாங்கம் செய்வது போல ஒரு தோற்றம் அளிக்கப்படுகிறது; இது வெறும் தோற்றம்தான்.

விவசாயக் கடன் தள்ளுபடி, விளை பொருட்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்தல், விவசாயிகள் பயன்படுத்தும் இடுபொருள்களுக்கு (எடுத்துக்காட்டாக மின்சாரம்) மானியம் வழங்கல் போன்றவை ஊடகங்களில் அதிகமாகப் புகழப்படுகின்றன. ஆனால், உண்மையில், வேளாண் பொருள்களுக்குக் கிடைக்கிற விலை, வேளாண் செலவை ஒப்பிடுகையில், நீண்ட காலமாகவே மிகக் குறைவாக இருக்கிறது என்பதைப் பல பொருளாதார வல்லுனர்கள் மற்றும் விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் குழுவில் இருக்கிற உறுப்புப்பினர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

விவசாயிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் இன்னும் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை என்பது வளர்ந்த நாடுகளின் விவசாயத்துறையைப் பார்த்தால்தான் தெரியும். எடுத்துக்காட்டாக, நம் நாட்டில், அறுவடை முதல் நுகர்வு வரை இருபத்தைந்து சதவீத தானியங்களும், காய்கறிகளும், பழங்களும் வீணடிக்கப்படுகின்றன. ஒருபுறம் பட்டினியால் மக்கள் வாடும்போது, மறுபுறம் உணவுப்பொருள்கள் குப்பைக்குப் போகின்றன. வீணாகும் உணவுப் பொருள்களைத் தவிர்த்து ஏழைகளுக்குப் பங்கிட்டால், வறுமையை ஒழித்துவிடலாம் என இந்தியாவைப்பற்றி நன்கு ஆய்வு செய்த, நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை குன்னார் மிர்தால் தன் Asian Drama என்ற நூலில் கூறியுள்ளார்.

வேளாண் பொருள்கள் சந்தையில் இடைத்தரகர்களும், பதுக்கல்காரர்களுமே அதிக இலாபம் அடைவதை பலரும் கணக்கிட்டுக் காட்டியுள்ளனர். வேளாண் பொருள்களுக்கு அவற்றின் நுகர்வோர் கொடுக்கின்ற விலையில் வெறும் ஐம்பது சதாவீதம்தான் விவசாயிளுக்குக் கிடைக்குக் கிடைக்கிறது. வளர்ந்த நாடுகளில் இந்த வித்தியாசம் மிகக் குறைவு. நம் நாட்டில் இன்றுள்ள அங்காடி அமைப்பு சிறு, குறு விவசாயிகளைச் சுரண்டும் விதமாகவே உள்ளது.

1950களில் நம் வயிற்றுப் பசிக்கு நாம் அமெரிக்கக் கோதுமையைக் கொண்டுவரும் கப்பல்களை நம்பி இருந்தோம். அமெரிக்கா குறைந்த விலைக்கு நமக்குக் கோதுமையைக் கொடுத்து உதவிய போதிலும், அதில் இரண்டு உள்-நோக்கங்கள் இருந்தன என்று அப்போதே பேரறிஞர் அண்ணாவும் அண்ணல் அம்பேத்காரும் கூறி வந்தனர். அவை:

(அ) அமெரிக்கர்கள் கோதுமையை நமக்குக் கொடுத்து, நம்மிடம் இருந்து, அவர்களுக்குத் தேவையான இராணுவத் தளவாடங்கள் உற்பத்திக்கு வேண்டிய உலோகங்களையும் தாதுப்பொருள்களையும் மிகக் குறைந்தவிலையில் பெற்று வந்தனர்.

(ஆ) கோதுமை விலையைக் குறைத்து, நம் விவசாயிகளுக்கு கோதுமை சாகுபடியில் நட்டத்தைக் கொண்டுவந்து ஆர்வத்தையும் குறைத்து, நம் நாட்டில் கோதுமை பயிரிடுவதைக் குறைத்து, கோதுமைக்கு அமெரிக்காவையே சில காலம் நம்பி இருக்கும் சூழலை உருவாக்கினர்.

அப்போதைய ஐம்பது கோடி மக்களுக்குப் போதுமான உணவு தானியங்கள் நம்மிடம் இல்லாததால், வேளாண் துறைக்கு நாம் முதலிடம் அளிக்கவேண்டுமென மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும் வற்புறுத்தி வந்தனர். நம் முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்துறைக்கே முதலிடம் அளித்தோம். பின்னர், தொடர்ந்து "பசுமைப் புரட்சி" மூலம், புதிய விதைகள், கருவிகள், மூலப் பொருள்கள், தொழில்நுட்ப முறைகளைப் புகுத்தி, வெற்றிபெற்று வருகிறோம்.

ஒரு நாளுக்கு ஒரு சராசரி இந்தியரின் உணவுத்தேவை சராசரியாக ஐநூறு கிராம் என மருத்துவத்துறையினர் (Indian Council of Medical Research) கூறுகின்றனர்; அதன்படி, (500கிராம் X 365நாட்கள் X 140 கோடி மக்கள்) நம் உணவுத் தேவை ஓராண்டுக்கு சுமார் 25 கோடி டன். அதை விட நாம் இன்று அதிகமாகவே உற்பத்தி செய்கிறோம். ஏற்றுமதிகூட செய்கிறோம்.

ஆனாலும், வாங்கும் சக்தி மற்றும் உணவு பற்றிய சரியான புரிதல் இல்லாதவர்கள் போதிய சத்துணவு கிடைக்காமல், உண்ணாமல் நோயுற்று வாடுகின்றனர் (குன்னார் மிர்தல், Asian Drama); அவர்களுடைய குழந்தைகள், போதுமான உடல் மற்றும் மூளை வளர்ச்சியின்றி உள்ளனர்; எனவே, அவர்களின் மருத்துவச் செலவு அதிகமாகிறது; வருமானம் குறைகிறது; ''வறுமை நச்சுச் சுழல்'' (vicious cycle of poverty) தொடர்கிறது. இது நம் வட மாநிலங்களில் மிக அதிகம். வாங்கும் சக்தி உள்ளவர்களில் பலர், குடி, போதை மற்றும் பிற ஆடம்பர செலவினங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, ஊட்டச் சத்து மிக்க உணவுகளின் மீதான செலவைக் குறைத்துவிடுகின்றனர்.

உணவுப் பொருள்களை நுகர்வதில் மக்களுக்குள் வேறுபாடுகளும் உள்ளன. பொதுவாக, ஏழை மக்கள் (செல்வந்தர்கள்) தங்களின் வருமானத்தில் அதிக (குறைவான) சதவீதத்தை வேளாண் பொருள்களுக்குச் செலவிடுவார்கள் எனப் பொருளியல் விதிகள் கூறுகின்றன. இதை நாம் நடைமுறையில் காணலாம். வருமானம் உயரும்போது, உணவு தானியங்களின் நுகர்வைக் குறைத்து, காய்கறிகள், பழங்கள், பால், முட்டை, இறைச்சி போன்றவற்றின் நுகர்வை அதிகப்படுத்தி வருகின்றனர். மேலும் வருமானம் உயர்ந்தால், வேளாண் அல்லாத துறைகளான கல்வி, மருத்துவம், பயணம், பொழுதுபோக்கு போன்றவற்றில் அதிகப் பணம் செலவிடப்படும்; உணவுக்காகச் செலவிடப்படும் பணத்தின் விழுக்காடு குறைந்துவிடும்.

வருமானம் அதிகமாக உள்ள நாடுகளில், வேளாண் துறையில் அதிக தொழில் நுணுக்கங்களைப் பயன்படுத்துவதால், வேளாண் துறையில் ஈடுபட்டு இருக்கும் மக்களின் விழுக்காடு குறைவாக இருக்கிறது; ஏழை நாடுகளில் அதிகமானோர், வேலைக்கும் பிழைப்புக்கும் வேளாண் துறையை நம்பி இருகிறார்கள். அவர்களைப் பிற துறைகளில் பயன்படுத்துவத்தில் சிக்கல்களும், சிரமங்களும் இருக்கின்றன.

பல பொருள்களின் உற்பத்தியில், நாம் உலகில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்துள்ளோம். இது பெரிய சாதனைதான் என்றால் மிகை இல்லை. நம் இந்தியப் பொருளாதாரத்தில், பிற துறைகள் மிக வேகமாக வளர்ந்துள்ளதால், தேசிய உற்பத்தியில், விவசாயத்துறையின் பங்கு, சதவீதத்தில் பார்க்கும்போது குறைந்துள்ளது. இது ஒரு பெரிய குறை இல்லை.

சமீப காலமாக, விவசாயம் அல்லாத துறைகள் மிக வேகமாக வளர்ந்து வருவதாலும், அங்கே அதிக வருமானம் பெறும் வாய்ப்பு இருப்பதாலும், விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம், நீர்ப்பாய்ச்சுக்கான நீர் நிலைகள் (கண்மாய்கள், குளங்கள், குட்டைகள்) குறைந்துள்ளன; வேளாண் நிலங்களில் கட்டடங்களும், விமான நிலையங்களும், பேருந்து நிலையங்களும் காணப்படுகின்றன; கிராமங்களில் இருந்து மக்கள், நகர்ப்புறத்தை நோக்கி வெளியேறிக்கொண்டு இருக்கின்றனர்.

ஆனாலும், நல்ல வேலையாக, தொழில் நுணுக்கத்தின் உதவியோடு விவசாய உற்பத்தி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது.

விவசாயத்துறையில் நாம் சாதனை படைத்துள்ளோம் என்பது உண்மையானாலும், நாம் சில சவால்களைச் சந்திக்க வேண்டியே உள்ளது.

(அ) இன்னும் இயற்கைச் சீற்றங்களில் மற்றும் மாற்றங்களில் இருந்து தப்பிக்க முடியாமலேயே நம் வேளாண் துறை இருக்கிறது;

(ஆ) நமக்குத் தேவையான பருப்பு மற்றும் சமையல் எண்ணை வகைகளைப் பெற, பல (கனடா, மலேசியா போன்ற) சிறிய வெளிநாடுகளையே நம்பியுள்ளோம்;

(இ) உணவுப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்கான போதுமான வசதிகள் நம்மிடம் இல்லை; இதனால், உணவுப் பயிர்களும், உணவுப் பொருள்களும் ஏராளமாக வீணாகின்றன;

(ஈ) நம் தவறான உணவுக் கலாச்சாரத்தால், வறட்டுப் பெருமைக்காக, அளவுக்கு அதிகமான உணவை வீணடிக்கிறோம்.

(உ) போதுமான, சரியான உணவுப் பொருள்கள் பெற முடியாமலும் மக்கள் இருக்கின்றனர்.

இவ்வாறாக, வேளாண் துறை வளர்ச்சியடைந்தாலும், விவசாயிகளின் சவால்கள் தொடர்ந்துகொண்டே உள்ளன. உணவு உற்பத்தி அதிகமாகி இருந்தாலும், பொருளாதார, சமூக, கலாச்சாரக் காரணங்களினால் போதுமான, சத்தான உணவை உண்ண முடியாதவர்களும் இருக்கின்றனர்.

பகுத்தறிவுப் பாசறையின் சுடரொளி திருச்சி வே. ஆனைமுத்து

டாக்டர் புதேரி தாணப்பன், டில்லி

தந்தை பெரியாரின் பெருந் தொண்டராகத் தமது வாழ்நாள் முழுவதும் விளங்கியவர் அறிஞர் ஆனைமுத்து அவர்கள். இவர் பெரியாரைப் பின்பற்றியதோடு அல்லாமல் பெரியாரின் சிந்தனைகளைத் தொகுத்து, "பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்" என்னும் பெயரில் மூன்று தொகுதிகளாக நூல் வெளியிட்டார். அந்நூல் அறிவு உலகுக்கு ஒரு பெரும் ஆவணமாக இன்றளவும் விளங்கி வருகிறது. அதனாலேயே ஆனைமுத்து அவர்கள், பெரியாரின் பெருந்தொண்டர் எனப் போற்றப்படுகிறார்.

ஆனைமுத்து, 1947 ஆம் ஆண்டுமுதல் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். 1962 ஆம் ஆண்டுமுதல் 1973 ஆம் ஆண்டுவரை பெரியாருடன் மிக நெருக்கமாகப் பழகும் அரிய வாய்ப்பினைப் பெற்றிருந்தார். அந்த நெருக்கம்தான், "பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்" என்னும் நூலைத் தொகுக்க அவருக்கு அங்கீகாரத்தையும் ஆளுமைத் திறனையும் அளித்தது.

பெரியார் காலத்திலேயே அவரது பேச்சுகள், எழுத்துகள் போன்றவற்றைத் தேர்வு செய்து தொகுக்கும் பணியை ஆனைமுத்து தொடங்கிவிட்டார். எனினும் தந்தை பெரியார் அவர்களது மறைவுக்குப் பிறகுதான் அதாவது, 1 - 7 -1974 இல்தான் 74 தலைப்புகளில் 2100 பக்கங்களில் மூன்று தொகுதிகளாகக் கலைஞர் அவர்களால் அந்த நூல் வெளியிடப்பட்டது. அவற்றில் விடுபட்டவை சேர்க்கப்பட்டு 9,300 பக்கங்களில் 20 தொகுதிகளாக அது 21 - 3 - 2010 அன்று வெளியிடப்பட்டது. அதையும் கலைஞர்தான் வெளியிட்டார்.

1970 ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம் 7 ஆம் நாள் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பெரியார் தனது தொண்டர்கள் அனைவருக்கும் ஓர் அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்றுப் போராட்டத்தில் பங்கெடுத்ததற்காக ஆனைமுத்து 18 மாதங்கள் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். அவருக்கு அது ஒரு களப் போராட்டமாகத் திகழ்ந்தது. அந்தப் போராட்டக் களம்தான் சமூக நீதியின் இன்றியமையாத

இலக்கான பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை வென்றெடுப்பதற்கான நீண்ட ஒரு பயணமாகப் பின்னால் விரிவடைந்தது.



இந்த இட ஒதுக்கீட்டுக்கான அவரது இயக்கத்தின் செயற்பாடுகள் தமிழ்நாட்டுடன் சுருங்கி விடாமல் வட நாட்டுக்கும் நீண்டது. ஒன்றிய அரசுப் பணிகளிலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என்று 1978 இல் அப்போது குடியரசுத் தலைவராக இருந்த சஞ்சீவிரெட்டியிடம் வலியுறுத்தினார். மேலும் கன்சிராம், முலாயம் சிங் யாதவ், லாலு பிரசாத் யாதவ், மாயாவதி போன்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட தலைவர்களுடன் சமூக நீதி சிந்தனையை ஒன்றிய அளவில் விரிவு படுத்துவதற்கான பேச்சுவார்த்தையை அவர் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்கிய மண்டல் குழுவின் அறிக்கை நடைமுறைக்கு வருவதற்கு, ஆனைமுத்து அவர்கள் உத்தரப்பிரதேசம், பிகார், ராஜஸ்தான், அரியானா, பஞ்சாப், அசாம், மேற்குவங்கம், கேரளா, கருநாடகம் என பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கான பல தலைவர்களையும் தொடர்பு கொண்டு பேசினார். நாடு தழுவிய அளவில் அவர் உருவாக்கிய அழுத்தம் ஓர் இன்றியமையாக் காரணமாக அமைந்தது. இட ஒதுக்கீடு தொடர்பான குழுவுக்கு அவர் தலைவராக நியமிக்கப்படும் முன்னரே மண்டல் அவர்களை நேரில் சந்தித்துத் தமது கருத்துக்களை வலியுறுத்தினார்.

பெரியாரிய சிந்தனையுடன் மார்க்சிய கருத்துகளும் இணைந்தால்தான் சமூக விடுதலை சாத்தியம் என்ற முடிவுக்கு ஆனைமுத்து வந்தார். எனவே அவர், "மார்க்சிய பெரியாரிய பொதுவுடமை கட்சி"யைத் தொடங்கினார். அதற்குரிய ஏடாக "சிந்தனையாளன்" இதழைத் தொடங்கினார். அது தமிழ்ச் சமூகத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தி வந்தது.

ஆனைமுத்து அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் பெரியார், சமூக நீதி, இட ஒதுக்கீடு என்ற கொள்கைகளுக்காகாகவே வாழ்ந்தார். ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் ஆனைமுத்து அவர்கள் சமூகநீதிக்காக ஆற்றிய தொண்டு காலத்தின் கல்வெட்டுகளில் அழியாத இடம் பெற்று நிலைத்து நிற்கும்.

"சமுதாய உரிமை, கல்வி உரிமை, அரசியல் ஆட்சி உரிமை, ஆகியவற்றை மீட்டெடுப்போம்" என்ற தியாகராயரின் உரிமை உணர்ச்சியை எங்கும் பரப்பியவர் தோழர் வே ஆனைமுத்து.

"விழித்தெழு! வீறு கொள்! இன்றேல் வீழ்ந்தே கிட" என்னும் டி. எம். நாயரின் எழுச்சியூட்டும் குரலை எதிரொலித்துக் கொண்டிருந்தவர் தோழர் ஆனைமுத்து.

"வகுப்புவாரி உரிமை நம் பிறப்புரிமை" என்ற பெரியாரின் போர் முழக்கத்தை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களிடையே இந்திய துணைக்கண்டத்தில் பல திசைகளிலும் ஓங்கி ஒலித்து இட ஒதுக்கீட்டுக் கோரிக்கைக்கு வலிமை சேர்த்தவர் தோழர் வே. ஆனைமுத்து.

உரிமை மறுக்கப்பட்டோரின் உரிமைக்குப் போராடிய போராளி தோழர் வே ஆனைமுத்து.

தமிழ்நாடு முழுவதும் பீகார் முழுவதும் உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களிலும் சுற்றிச் சுழன்று பெரியாரின் விகிதாசார வகுப்புரிமையை விதைத்துப் போராடத் தூண்டியவர் ஆனைமுத்து.

எளிய முறையில் யாப்பறிவோம்

நெருப்பலையார் இராம இளங்கோவன், பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்.

பாடம்: 44.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்பது முன்னரே எடுத்தியம்பிய கலிப்பாக்களுக்குரிய இலக்கண உறுப்புகளிலிருந்து மாற்றம் பெற்றோ, அல்லது மயங்கியோ வருதலால் இது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆயிற்று. அதாவது, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புகளைப் பெற்று மிகுந்தோ குறைந்தோ இடம் மாறி மயங்கி வருதலால் இது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றே பெயர் பெற்றது.

இம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில் அளவடியாகக் கொண்ட நான்கடி நான்கடியாக இரண்டு பாடல் முதலில் தரவாக வரும். தரவை அடுத்து, இரண்டிரண்டு அடிகளாகப் பயின்று ஆறு பாடல் தாழிசைகளாக வரும். இந்த ஆறு தாழிசைப் பாடல்களைத் தொடர்ந்து ஒரு தனிச்சொல் பெற்று வரும். இத் தனிச்சொல்லுக்கடுத்து இரண்டிரண்டு அடிகள் கொண்ட நான்கு பாடல்கள் அராகமாக வரும். இந்த அராகப் பாடல் முழுக்க ஈரசைக் கொண்ட இயற்சீர்களில் அமையும்.

அராகத்தைத் தொடர்ந்து இரண்டிரண்டு அடிகள் கொண்ட ஆறு தாழிசைகள் மீண்டும் இடம் பெறும். பின்னர் ஒரு தனிச்சொல் வரும். அடுத்து, இரு சீர்கள் கொண்ட எட்டடிப் பாடலாக சிற்றெண் என்னும் அம்போதரங்கம் அமையும். இந்த எட்டடி கொண்ட அம்போதரங்கத்திற்குப் பின்னர் தனிச்சொல் பெற்று வரும். இறுதியாக ஆசிரியச் சுரிதகம் நான்கடியில் இடம் பெறும். இச் சுரிதகத்தின் மூன்றாம் அடியான ஈற்றயலடியானது ஒரு சீர் குறைந்து சிந்தடியாக வரும்.

சுரிதகம் ஈற்றடியில் ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடிதல் வேண்டும். அராகம், அம்போதரங்கம், சுரிதகம் ஆகிய இவைகளின் சீர்கள் இயற்சீர்களில் அமையும். மற்ற தரவு, தாழிசைகள் எல்லாம் இயற்சீர்களும் காய்ச்சீர்களும் பயின்று வரும். இப்பாடலில் அனைத்து உறுப்புகளிலும் இரண்டிரண்டு அடிகளுக்கோர் எதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமைந்து வரும். எட்டடிக் கொண்ட அம்போதரங்கமும், சுரிதகத்தின் ஈற்றயலடியும் தவிர்த்து மற்ற பாடலடிகள் அனைத்தும் அடி தோறும் நான்கு சீர்கள் கொண்ட அளவடியாகவே வரும். ஆசிரியச் சுரிதகத்தைப் பத்தொன்பது அடிகளாகவும் எழுதலாம்.

இம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவைப் போல அதிகமான உறுப்புகளைக் கொண்ட பாடல் கலிப்பா வகைகளில் வேறில்லை. இடத்தின் வரையறையின்றியும், இத்தனை அடிகள், இத்தனை உறுப்புகள் என்ற வரையறை இன்றியும் மிகுந்தும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும் வந்ததால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆயிற்று.

இனி மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவுக்கான எடுத்துக் காட்டாக ஒரு பாடலைக் காண்போம்:

வேற்றுமை ஏனடா? ஒற்றுமை காணடா!
(மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா)

நான்கடித் தரவு -1:

ஊதியே அணைத்துவிட ஊதுவத்தி நானில்லை;
மோதியே அழிக்கின்ற முடிவற்ற எரிமலைநான்;
மெழுகுவர்த்தித் தீயல்ல; மேலெரியும் ஞாயிறுநான்;
அழுக்கிலே பிறந்தவர்தாம் அனைவருமே அறிந்திடடா!

நான்கடித் தரவு -2:

உயர்ந்தவன் தாழ்ந்தவனென் றுரைத்திடும்நீ தவளையடா;
அயர்ந்திடாமல் உழைப்பவனே ஆற்றலுடை உயர்ந்தவன்டா!
நாய்களும் நரிகளுமே நாட்டாண்மை செய்யலாமா?
வாய்பெருத்து வந்ததெல்லாம் வகையாக உளரலாமா?

தாழிசை -1:

விண்ணுலகின் செம்பருதி வெண்ணிலவு விண்மீன்கள்
மண்ணுலகில் நான்தானே! மடையரெல்லாம் உணரவேண்டும்!

தாழிசை-2:

இடிமின்னல் இவ்வுலகில் யானேதான் உணர்ந்திடடா!
விடிவெள்ளி நானடா!விடியலையே தருவேன்டா!

தாழிசை-3:

புயற்காற்றும் நானடா; புவியினைப் புரட்டிடுவேன்;
அயர்ந்திடாத நெம்புகோல் ஆமாம்நான் தானடாபார்!

தாழிசை-4:

சுழன்றடிக்கும் சுழற்காற்றாய்ச் சுழற்றியேதான் அடிப்பேன்டா!
விழலெனவே நினைத்தாயோ? வேற்றுமையை விதைக்காதே!

தாழிசை -5:

சுழல்கின்ற கடலலைநான்; சுழன்றெழுந்து கொன்றிடுவேன்!
உழல்கின்ற பிரிவினையை ஒழித்திடவே போர்த்தொடுப்பேன்!

தாழிசை -6:

எங்கெங்கும் இன்னலின்றி எவருந்தான் வாழ்ந்திடவே
பொங்கிடுவேன் கடலெனவே புவிப்புரட்டிப் போட்டிடுவேன்!

தனிச்சொல்: *இதனால்,*

அராகம் இரண்டடியில் நான்கு பாடல்கள்: (இயற் சீர்கள்)

வேற்றுமை யின்றி விழைந்துற வாடியே
போற்றிப் புகழ்ந்து புறங்கூ றாமல்

ஏற்றே ஒற்றுமை இனிதே வாழ
காற்றாய் வீசியே கனிவும் கொள்க.

சின்ன மீனைத் தேடியே பிடித்துத்
தின்னும் பெரிய திமிங்கிலம் தானே!

அதுபோ லின்றியே அனைவரும் இணையென
பொதுவாய் நடக்கப் புவியும் மணக்குமே!

தாழிசை -1:

உயர்ந்தவனாய் உயரத்தில் ஒளிப்பிழம்பாய் திகழ்ந்தபோதும்
அயர்ந்திடாமல் பகற்பொழுதை அன்றாடம் படைக்கிறதே!

தாழிசை -2:

என்றாலும் தருக்கின்றி எப்பொழுதும் உயர்திணையாய்
வென்றிருக்கும் செம்பருதி வேட்கையைப்போல் வாழவேண்டும்!

தாழிசை -3:

தண்ணொளியை இரவினிலே தாளிக்கும் வெண்ணிலவும்
கண்ணியமாய்த் தருக்கின்றிக் கனிவுடனே உலவிடுமே!

தாழிசை -4:

விடியலினை வழங்குகிற விடிவெள்ளி பெரும்மனத்தால்
விடிந்திடுமே புவிதோறும் விடிகாலை பகல்பிறக்கும்!

தாழிசை -5:

புயற்காற்றும் வீசுகிற பொல்லாத காற்றெனினும்
தயங்காமல் அறம்வழியில் தருக்கின்றி இயங்கிடுமே!

தாழிசை -6:

பொறுமையாக இரவினிலே புத்தொளியை மின்மினியாய்
மறுக்காமல் தருகின்ற வானமீனாய் அமைதிவேண்டும்!

தனிச்சொல்: *இவைபோன்று,*

இரு சீர் ஓரடியில் எட்டாம் அம்போதரங்கம் (சிற்றெண்)

அன்பினை நிறைத்துவை; அறத்தினைப் போற்றிடு;
தன்குறை நினைத்துமே
பிறர்குறை மறந்திடு;
இன்பமும் பொதுவென
எல்லார்க் கீந்திடு;
வன்முறை நீக்கியே
வையமும் வாழவிடு!
தனிச்சொல்: என்றென்றும்,
நான்கடியில் ஆசிரியச் சுரிதகம்:
உயிர்களைப் போற்றி உயிர்களைக் காத்துமே
பயிரைக் காத்தலாய்ப் பாங்காய்க் காத்திட
கயிறென உறவினைக் கட்டுவேன்;
மயிலெனக் குயிலென மகிழசெய் வேனே!

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பா வகையில் விரிவான இலக்கண வாய்ப்பாடும், எடுத்துக் காட்டாக மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவை எப்படி எழுதுவது என்பதைப் பாடல் வாயிலாகவும் பயின்று பயிற்சி எடுத்தோம்; இனி, அடுத்த பாடத்தில் கலிப்பா வகைகளில் உறழ் கலிப்பாப் பற்றிப் பயின்று பயிற்சி எடுத்து பாவகையை அறிந்து கொள்வோம்.

யாப்பிலக்கணம் வளரும்.

கடலினும் பெரிய கண்கள், அம்ம !

டாக்டர் அண்ணாமலை சுகுமாரன் சித்தரியல் ஆராய்ச்சியாளர், புதுவை

தமிழில் கடலானது அரலை, அரி, அலை, அழுவம், அளம், அளக்கர், ஆர்கலி, ஆலந்தை, ஆழி, ஈண்டுநீர், உரவுநீர், உவர், உவரி, உவா, ஓதம், ஓதவனம், ஓலம், கயம், கலி, கார்கோள், கிடங்கர், குண்டுநீர், குரவை, சக்கரம், சலதரம், சலநிதி, சலராசி, சலதி, சுழி, தாழி, திரை, துறை, தெண்டிரை, தொடரல், தொன்னீர், தோழம், நரலை, நிலைநீர், நீத்தம், நீந்து, நீரகம், நிரதி, நீராழி, நெடுநீர், நெறிநீர், பரப்பு, பரவை, பரு, பாரி, பாழி, பானல், பிரம்பு, புணர்ப்பு, புணரி, பெருநீர், பௌவம், மழு, முந்நீர், வரி, வலயம், வளைநீர், வாரி, வாரிதி, வீரை, வெண்டிரை, வேழாழி, வேலை என பல சொற்களால் தமிழில் கடல் அழைக்கப்படுவதாக விக்கி குறிப்பிடப்படுகிறது.



இத்தனைப் பெயர்கள் கொண்ட கடல் எத்தகையது எங்கனம் உருவானது என்பதை இப்போது பார்க்கலாம்.

“கடலினும் பெரிய கண்கள், அம்ம” என்று நீண்டு. அகன்று பரந்திருந்த சீதையின் கண்களைப் பார்த்து வியந்து கூறுகிறான் கம்பன்.

ஆம், கடல் மிகப் பெரியதுதான்.

கடல் என்றதுமே நம்முள் அதிசயமற்றும் பரவசம் கொண்ட உணர்ச்சி உண்டாவது இயற்கை.

நமது பூமி ஆதியில் குரியனிலிருந்து தெறித்து விழுந்த ஒரு துண்டு ஆகும் . தெறித்து விழுந்தபோது அப்படித் அளவு கடந்த வெப்பமுடைய வாயு உருண்டையாக இருந்தது வாயு உருண்டை பரந்து அந்து அனல் : விரிந்த விசும்பிலே நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில ஓடி வந்து வெகு தொலைவில் நின்றுகொண்டு சுழன்ற வண்ணம் இருந்தது.

பிறகு உஷ்ணம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. வருஷங்கள் பலச் செல்லச் செல்ல, படிப்படியாகக் குளிர்ந்து இறுகிக் கொண்டு வந்ததுவாயுவாக கழிந்தபின் ஆயிரக்கணக்கான வருடங்கள் . இருந்த பொருள்கள் திரவ ரூபத்திற்கு வந்தன.

பின்பு மேலும் மேலும் உஷ்ணம்குறைந்துகொண்டே வந்ததுதிரவமும் . இருக்க இருக்க இறுகிக் கொண்டு வரலாயிற்றுதிரவத்தைச் அத் சமயம் அந்தச் . சூரியன் வெகு தூரத்திலிந்தபடி கவர்ந்து இழுத்தது: இழுவை காரணமாகத் திரவம் புரண்டு புரண்டு அலையாக எழுப்பித் திரிந்ததுகழித்துச் சிறிது காலம் . சூரியனின் இழுவை மிக அதிகமாகிய போது பூமியிலிருந்து திரவம் இருந்த பகுதிகள் சில பிய்த்துக்கொண்டு போகப்பட்டன. அதனால் உருண்டையாக இருந்த பூமியில் மாபெரும் பள்ளங்கள் ஏற்பட்டன.

இவ்விதம் பிய்த்துக்கொண்டு போகப்பட்ட பொருள்கள் ஒன்று சேர்ந்து சந்திரனை உண்டாக்கியதாக விஞ்ஞானிகள் கருதி வந்தார்கள்அப்போது . பசிபிக் மகா சமுத்திரத்தின் அடி நிலத்தை ஆக்கியுள்ள பொருள்கள் போல் சந்திரனிலும் காணப்படுவது ஒரு காரணமாகும் என்று கூறி வந்தார்கள். பகிபிககில் போல மற்ற கடற்பிரதேசங்களின் அடிப்பாகத்திலுள்ள தரைப்பகுதி அமைந்திருக்கவில்லை என்றும், அதனால் இப்போது பசிபிக் பெருங்கடல் உள்ள பகுதியிலிருந்து சென்ற பொருள்கள் தான் சந்திரனை ஆக்கியுள்ளன என்றும் கூறினர்.

ஆனால் சமீபத்தில் ஆராய்ச்சிகள் கடத்திய காலத்தில் எல்லா சமுத்திரங்களின்ஒரே மாதிரியான பாகமும் தரைப் முறையில்

அமைந்துள்ளதென்றும், ஆகையால்பூமியிலிருந்து வீசி எறியப்பட்ட பொருள்களால் சந்திரன் ஆனதாகக் கொள்வது தவறு என்றும் தெரியவந்த து.

இந்த கேள்விகளுக்கான பதில் கூறவேண்டிய விசாரத்தை விஞ்ஞானிகளுக்கு விட்டுவிட்டு sசூரியனின் ஈர்ப்பினால் பூமியில் மாபெரும் பள்ளங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் சந்திரன் தோன்றியதாக நாம் எடுத்துக் கொண்டு மேலே போகலாம்.



சந்திரன் கோன்றியபின் பூமியின் மேல் ஓடு நன்கு குளிர்ந்து இறுகியது பாறைகள் . தோன்றி, கெட்டியான மேற்பாகம் அமைந்ததுகுளிர்ச்சி . வரவர அதிகமாகியது. குளிர்ச்சி காரணமாக மேற்பரப்பை ஒட்டிப் பூதாகாரமான மேகங்கள் உண்டாயின.

காலங்கள் ஆக மேகங்கள் அடுக்கு அடுக்காகப் பெருகி உலவினசூடு . நல்ல அளவிற்குக் குறைந்து பூமி போதுமான குளிர்ச்சி அடைந்தபின் சூழ்ந்து கொண்டிருந்த மேகங்களிலிருந்து நீர் கொட்ட ஆரம்பித்தது.

நாளாவட்டத்தில் அம் முகில்கள் ஏராளமாக நீரைப் பொழிந்தனமாதக் . கணக்காக வருடக்கணக்காகப் பேய் மழை பெய்தவண்ணம் இருந்ததுவிழுந்த . தண்ணீரெல்லாம் முன் சொன்ன பள்ளங்களில் போய்த் தங்கியது.

நிலப் பரப்பிலுள்ள உப்புச் சத்துக்களைக் கரைத்துக் கொண்டு மழைத் தண்ணீர், பள்ளங்களில் போய்ச் சேர்ந்ததுசூழ்ந்திருந்த படை படையாகச் . மேகக் கூட்டங்களிலிருந்து வீழ்ந்த ஏராளமான நீர் பெருகித் தேங்கியபின் அது கடலாகக் காட்சி அளித்தது உருவாவதற்கு கடல் இப்படியாகக் .எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகள் செலவாயின தோன்றியே இப்போது கடல் .20 கோடி வருஷங்களுக்கு மேல் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். கொட்டுக் கொட்டு என்று கொட்டிய மழை நிலப் பரப்பிலிருந்து உப்புகளைக் கரைத்துக் கொண்டும் பாறைத் துகள்களை அடித்துக் கொண்டும் போய்ப் பள்ளங்களில் சேர்த்ததுஅக்காலத்தில் . கடல் நீர் சிறிகளவு தான் - உப்பாக இருந்ததுகாலம் . உருள உருள உவர்ப்பு அதிகமாகிக் கொண்டே வந்தது.

கடல் உருவாவதற்கு முன் இப் பூமண்டலத்தில் ஜீவராசி என்பதே கிடையாது .உண்டாகவில்லை தாவர இனமும் .உப்புக் கலந்த சமுத்திர நீரில் கற்பனையால் கண்டு கூறமுடியாத சீதோஷ்ண நிலையில் உயிரற்ற ஒன்றி விருந்து உயிசென்றதொன்று தோன்றியிருக்க வேண்டும். அவ்விதம் தோன்றுமுன் எத்தனை எத்தனை காரியங்கள்; எத்தனை எத்தனை முயற்சிகள் இடைபெற்றனவோ; யாருக்குத் தெரியும்?

இதைப்படிப்பவர்கள் அதிகம் இருப்பின் கடலில் இருந்து முதல் உயிர் எவ்வாறுத் தோன்றியது பின்பு நிலத்தில் உயிர்கள் எங்கனம் பெருகியது என்பதை எழுதுகிறேன்.

அண்ணாமலை சுகுமாரன் 11/7/2022 Repost 11/7/2026

படம்: கடலை ஆளும் மனிதம்

இதில் இருக்கும் பல செய்திகள் திரு ராஜாராம் அவர்கள் எழுதிய கடல் எனும் நூலில் இருந்து பெறப்பட்டவை.

சோவியத் திராவிடவியல் அறிஞர் அலெக்சாண்டர் மிகைலோவிச் மெர்வார்ட்

முனைவர் தேமொழி (USA)

'ஏமெர்வார்ட் .எம் .' அல்லது 'அலெக்சாண்டர் மிகைலோவிச் மெர்வார்ட்' (Alexander Mikhailovich Mervart) என்பவர் சோவியத் மொழியியலாளர் மற்றும் மானுடவியலாளர் ஆவார்லெனின்கிராட் கீழைத்தேயக் கல்வி நிறுவனத்தில் . விரிவுரையாளராகப் பணியாற்றிய அலெக்சாண்டர் மெர்வார்ட் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் அங்கு தமிழ் கற்பிக்கப்பட்டது .1921-ல் இந்நிறுவனம் மாஸ்கோ கீழைத்தேயவியல் கல்வி அமைப்பாக மறுசீரமைக்கப்பட்டது. அலெக்சாண்டர் மெர்வார்ட் 1913 ஆம் ஆண்டில் மனிதவியல் மற்றும் இனவியல் துறையின் இந்தியக் கிளையின் தலைவராக நியமிக்கப்பட்டார்அவருடைய சீரிய . பங்களிப்பால் அலெக்சாண்டர் மெர்வார்ட், சோவியத் திராவிடவியல் துறையின் நிறுவனராகக் கருதப்படுகிறார்ரஷ்யாவில் திராவிட மொழிகளில் . நிபுணத்துவம் பெற்ற முதல் வல்லுநரும், லெனின்கிராட் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் தமிழ் கற்பித்தவரும் இவரே.

அலெக்சாண்டர் மெர்வார்ட்ஜெர்மனியின் மான்ஹெய்ம் நகரில் 1884-ஆம் ஆண்டு பிறந்தார். ஹைடெல்பெர்க் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று 1907-ல் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றார்மானுடவியலாளருமான அவரது . (லியுட்மிலா அலெக்ஸாண்ட்ரோவ்னா லெவினா) மனைவி லியுட்மிலா இவருடன் இணைந்து, 1914-18 காலகட்டத்தில், புனித பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள முதலாம் பீட்டர் மானுடவியல் மற்றும் இனவியல் அருங்காட்சியகத்தின் தெற்காசியத் துறைக்காகக் காட்சிப் பொருட்களைச் சேகரிப்பதற்காக, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஒரு பயணத்தை இருவரும் மேற்கொண்டார் . அந்தப் பயணத்தின் போது பாலி மற்றும் தமிழ் மொழிகளைக் கற்றதோடு, கேரளாவின் கதகளி நாட்டுப்புற நாடகம் குறித்த தகவல்களையும் சேகரித்தனர்.

இந்தியப் பயணம் :

அலெக்சாண்டர் மெர்வர்ட்
1884—1932

திராவிட மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், தேசிய தனித்தன்மைகள், மொழிகள் மற்றும் இலக்கியங்களை நேரடியாக ஆய்வு செய்யும் வாய்ப்பு இப்பயணத்தில் இவர்களுக்குக் கிட்டியதுதாயகம் . திரும்பியதும், அவர்கள் "1914-18ல் இந்தியாவிற்கு மேற்கொண்ட இனவரைவியல் பயணம் குறித்த அறிக்கை" என்ற நூலை வெளியிட்டனர் . அதே சமயம், அலெக்சாண்டர் மெர்வார்ட் பல கட்டுரைகளையும், குறிப்பாக "இந்திய இனவரைவியலின் சாதனைகளும் சிக்கல்களும்", "இந்தியப் பண்பாடு குறித்த ஒரு சுருக்கமான அறிக்கை" மற்றும் இந்தியப் பண்பாட்டில் அருங்காட்சியகங்களின் பங்கு குறித்த வேறு சில கட்டுரைகளையும் எழுதினார்.

மேலும் இவர், இந்தியாவின் செவ்வியல் மற்றும் மக்கள் நாடகங்களான திராவிட நாடகங்களை ஆராய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார் .1928-ல் "பண்டைய இந்தியாவின் ஒரு செவ்வியல் நாடகத்தில் மக்கள் கலையின் கூறுகள்" என்ற கட்டுரையையும், "மலபார் மக்கள் நாடகத்தில் சகுந்தலையின் கதைக்கரு" என்ற கட்டுரையையும் எழுதினர்பிறகு தொடர்ந்து திராவிட நாடக அமைப்பின் . .ள்ளலானார்தொகுப்புச் சிக்கல்களில் அலெக்சாண்டர் மெர்வார்ட் ஆர்வம் கொ 1928-ல் வெளியான 'கீழைநாட்டு நாடகம்' என்ற நூலில், திராவிட நாடகத்தின் சிறப்பியல்பு அம்சங்களை விவரிக்கும் அவரது 'இந்திய மக்கள் நாடகம்' என்ற கட்டுரைக்கு அதிக இடம் கொடுக்கப்பட்டுள்ளது .

தமிழ் பேச்சுவழக்கு மொழியின் இலக்கணம்:

திராவிடவியல் ஆய்வுகளில், அலெக்சாண்டர் மெர்வார்ட்டின் 'திராவிட மொழிகளில் உயிரெழுத்துகளுக்கு இடையேயான நிறுத்தற்குறிகளின் வரலாறு' என்ற கட்டுரை மதிப்புமிக்கதாகக் கருதப்படுகிறதுஅவர் திராவிட மொழிகளின் .,

குறிப்பாகத் தமிழின், இலக்கணம் மற்றும் சொல்லகராதியில் உள்ள பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்தார்; திராவிடர்களுடனான தனது தனிப்பட்ட தொடர்புகளின் மூலம் பெற்ற தகவல்களைத் தனது ஆய்வுகளில் பயன்படுத்தினார்அவருடைய . படைப்புகள், அவற்றின் உள்ளடக்கத்தின் புதுமைக்காகவும், பல்வேறு கேள்விகளைத் துணிச்சலுடன் முன்வைத்த விதத்திற்காகவும் குறிப்பிடத்தக்கவையாக இருப்பதற்குக் காரணம் இதுவே .



அத்தகைய படைப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு, *1929*-ல் வெளியான 'தமிழ் பேச்சுவழக்கு மொழியின் இலக்கணம்' (A Grammar of the Tamil colloquial language / Grammatika tamilskogo razgovornogo yazyka / Грамматика тамильского разговорного языка*)* என்ற நூல் ஆகும்இது . ரஷ்யாவில் திராவிட மொழிகளைக் தமிழ் .கையாண்ட முதல் நூலாகும் மொழிய ின் ஒட்டுநிலை *)*Agglutinative*)* அமைப்பைக் கருத்தில் கொண்டு இந்த இலக்கண நூல் உருவாக்கப்பட்டுள்ளது . திராவிட மொழியியலில் ஒரு முக்கியப் படைப்பான*228* பக்கங்கள் கொண்ட இந்நூல் லெனின்கிராட்டில் ஏ . *)* எனுகிட்ஸே கீழைத்தேய நிறுவனம்*Oriental Institute)* மூலம் *1929*இல் வெளியிடப்பட்டது மெர்வார்ட் எழுதிய .எம் .ஏ ."தமிழ் பேச்சுவழக்கு இலக்கணம்" என்ற இந்நூல் எண்ணிம வடிவத்தில் விக்கிமூலத்தில் *)Wikisource)* சேமிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் *1930*இல் ரஷ்ய அரசுப் பாதுகாப்பு அதிகாரிகளால், லெனின்கிராட் பல்கலைக்கழக அறிவியல் கழகத்தைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் குழுவிற்கு எதிராக, நாட்டின் பாதுகாப்பு என்ற

அடிப்படையில் புனையப்பட்ட குற்றவழக்குத் தொடுக்கப்பட்டதுத அந் .
ஆய்வாளர்கள்"முடியாட்சிக்கு எதிரான புரட்சி அமைப்பு" ஒன்றை உருவாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர்அவர்களி .ல் நூற்றுக்கணக்கானோர் பணிநீக்கம் செய்யப்பட்டனர் இப் புனையப்பட்ட ."கல்விசார் வழக்கு" என்று சொல்லப்பட்ட வழக்கில் அலெக்சாண்டர் மெர்வார்ட் ஜெர்மனிக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்ஆர்க்டிக் பகுதி முகாமுக்கு . நாடு கடத்தப்பட்ட அவர்1932, மே 23 அன்று சிறையில் காலமானார்.

அலெக்சாண்டர் மெர்வார்ட் தமிழிலிருந்து ரஷ்ய மொழிக்குப் பல மொழிபெயர்ப்புகளைச் செய்தார் .1928-ல் "தி ஃபாரின் லிட்டரேச்சர் ஹெரால்ட்" இதழில் "புனிதமான ஏழை உயிரினம் மற்றும் அதன் ஐந்து சீடர்களின் துயரச் சம்பவங்கள்" பற்றிய ஒரு புராணக்கதை வெளியிடப்பட்டதுமெர்வார்ட்டின் . பெரும்பாலான தமிழ் புராணக்கதைகள், கதைகள், பழமொழிகள் மற்றும் பொன்மொழிகளின் மொழிபெயர்ப்புகள் அவரது மரணத்திற்குப் பிறகு, அதாவது 1961, 1963, 1964-ல் வெளியிடப்பட்டன .'மணிமேகலை' காப்பியத்தை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்தார் என்று தெரிகிறதுஆனால் அந்தப் படைப்பு . அக் கையெழுத்துப் அவர் சிறை சென்ற பிறகு .ஒருபோதும் வெளியாகவில்லை மெர்வார்ட்டின் படைப்புப் பணிகள் .பிரதி மறைந்து போனதாக அறியப்படுகிறது சோவியத் திராவிடவியல் மற்றும் தமிழ், பிற திராவிட மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புப் பணிகளின் தொடக்கத்தைக் குறிக்கின்றன.

உதவிய தளங்கள் :

1. Tamilological Studies in Russia and in the Soviet Union. Dr. V. A. Makarenko. https://iocs.hse.ru/tamil/makarenko

2. Alexander Mervart. https://grokipedia.com/page/alexander_mervart

3. மெர்வார்ட் ஏ - தமிழ் பேச்சுவழக்கு இலக்கணம் - .எம் .1929. https://ru.wikisource.org/wiki/Индекс:Грамматика_тамильского_разговорного_языка_(Мерварт,_1929).pdf

மொழிபெயர்ப்பில் பொருள் வகைகளும் சிக்கல்களும்

முனைவர் செ ராஜேஸ்வரி, மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர், இதழாசிரியர்

மொழியில் சொற்கள் மூலநூலாசிரியரின் கருத்துக்களை விளக்கும் கருவிகளாகப் பணியாற்றுகின்றன. ஆசிரியரின் சிந்தனையும் அதற்கு அவர் அளிக்கும் வரி வடிவமும் நாணயத்தின் பக்கங்களைப் போலப் பிரிக்கவியலாத வகையில் ஒன்றுபட்டு விளங்குகின்றன. வாசகரும் மொழி அல்லது சொல் மூலமாக ஆசிரியரின் கருத்தைப் புரிந்துகொள்ள முயலுகிறார். பொருளுணர்த்தும் முறைகளையும் அவற்றினால் மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்களையும் இவ் இயல் ஆராய்கிறது.

மொழிபெயர்ப்பில் சொற்பொருள் புலப்பாடு இரண்டு நிலைகளில் செயலாற்றுகிறது. மூலநூ லாசிரியரின் கருத்தை மூல நூலில் இடம்பெற்றுள்ள சொல் வாசகருக்குப் (மொழிபெயர்ப்பாசிரியருக்குப்) புலப்படுத்தும். வாசகர் தாம் புரிந்துகொண்ட மூலநூற் கருத்தைத் தாம் மொழிபெயர்க்கும் மொழியில் வழங்கும் ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் மூலம் உணர்த்துவார். இம் மொழிபெயர்ப்பைப் படிக்கும் வாசகர் (P.L. Reader) மூலநூலாசிரியரின் கருத்தை மொழிபெயர்ப்பாசிரியர் தேர்ந்தெடுத்த நிகரனின் (Selected Equivalent) மூலம் உணர்கிறார். எனவே முதல் நிலையில் மூலநூலாசிரியருக்கும் மொழிபெயர்ப்பாசிரியருக்கும் இடையே நடைபெறும் சொற்பொருள் புலப்பாடு, இரண்டாம் நிலையில் மொழிபெயர்ப்பாசிரியருக்கும் பெறுமொழி வாசகருக்கும் இடையில் நடைபெறுகிறது.

ஒரு சொல்லை மூலநூலாசிரியர் தேர்ந்தெடுப்பதற்கும் மொழிபெயர்ப்பாசிரியர் தேர்ந்தெடுப்பதற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. மூல நூலாசிரியர் தம் கருத்தைப் புலப்படுத்தும் வரி வடிவத்தைத் தேர்வு செய்கிறார். இத் தேர்வு சுதந்திரமானது *(free selection)* ;ஆனால், மொழிபெயர்ப்பாசிரியர் தாம் உணர்ந்ததற்கேற்ப பெறுமொழியில் ஏற்புடைய, இயல்பான நிகரனைத் தேர்ந்தெடுக்கிறார். மூலநூ லாசிரியரின் தேர்ந்தெடுப்பின்

பின்னணியும் சூழ்நிலையும் இம்மொழிபெயர்ப்பாசிரியருக்கு இல்லை. இவருடைய தேர்வு சுதந்திரமானது அன்று; இது கட்டுவிட தேர்வு அல்லது செயற்பாடு ஆகும் (bound selection or bound function) இரண்டு தேர்வு முறைகளும் மூலநூலாசிரியரின் கருத்தினைப் புலப்படுத்தும் ஒரே நோக்கினையுடையன; எனினும், முதல் தேர்வுமுறையான மூலநூலாசிரியரின் தேர்வுமுறையைக் காட்டிலும் இரண்டாம் தேர்வுமுறையான மொழிபெயர்ப்பாசிரியரின் தேர்வுமுறையில் சார்புத்தன்மையும் (dependence) கட்டுப்பாடுகளும் (restrictions) மிகுதி. மேற்காட்டிய நிலைமைகள் மொழிபெயர்ப்பில் பொருள் புலப்பாட்டில் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. இச்சிக்கல்களை வகைப்படுத்தி ஆராய்வது தெளிவுக்கு வழிவகுக்கும். படைப்பும் அதனை மொழிபெயர்த்தவரும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களின் களமாக உள்ளனர். மூலநூ லாசிரியரின் கருத்துப் பிரதிபலிப்பாக மூலநூல் அமைவதால் படைப்பு என்பதில் மூலநூலாசிரியரும் உட்படுவார்.

படைப்பு (அல்லது நூல் அல்லது பாடம்) என்பது சொற் குறிகளால் உருவாக்கப்பட்டதாகும். இவை புலப்படுத்தும் பொருள் முறைகளில்ஏற்படும் சிக்கல்களை அகச் சிக்கல்கள் (Internal Problems), புறச் சிக்கல்கள் (External Problems) எனப் பகுக்கலாம். மொழிபெயர்ப்பாசிரியரின் நூலறிவாலும் மனப் போக்காலும் ஏற்படும் சிக்கல்களை மொழிபெயர்ப்பாசிரியர் சிக்கல் (Translator's Problems) எனப் பகுக்கலாம்.

அகச் சிக்கல் என்பது ஒரு சொல் புலப்படுத்தும் பாடப்பொருளை மொழிபெயர்க்கும் போது ஏற்படும் சிக்கல்களைக் குறிக்கிறது. புறச் சிக்கல் என்பது ஒரு சொல் புலப்படுத்தும் பாடப்பொருளுக்குப் புறத்தேயுள்ள மரபு மற்றும் பண்பாட்டுப் பொருளைப் புலப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களைச் சுட்டுகிறது.

மொழிபெயர்ப்பாசிரியர் சிக்கல் எனும் வகை, மூலமொழியில் எழுதப்பெற்ற நூலை மற்றொரு மொழியில் மொழிபெயர்க்கும் போது அவ் ஆசிரியர் எதிர்கொள்ளும் சிக்கல்களை உணர்த்துகிறது. இவ்வகையில் படைப்பும் ஆசிரியரும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களின் அடிப்படைக் காரணிகளாக இருப்பதனை இவ் இயல் விளக்க முனைகிறது.மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

வெவ்வேறு பொருள் புலப்பாட்டு முறைகளில் ஏற்படுவதால் முதற்கண் பொருள் வகைகளை விளக்குவது இன்றியமையாததாகிறது.

பொருள் வகைகள்:

ஒரு பாடத்தில் (Text) ஆசிரியரின் கருத்திற்கு ஏற்ப பொருள் புலப்படுத்தும் முறை காணப்படுகிறது. இப்பொருளை (Meaning)அப்பாடத்தைப் படிப்பவர் புரிந்துகொள்வதன் மூலம் ஆசிரியரின் மனக்கருத்தை அறிந்துகொள்கிறார். இப்பொருள் புலப்பாட்டில் ஆசிரியர், பாடம் அல்லது மொழிக் குறிகள் *(Linguistic signs),* படிப்பவர் ஆகிய மூவரின் பங்கும் இடம் பெறுகின்றன. மூல பாடத்தைப் படித்துணர்பவர்களுள் ஒருவரே மொழிபெயர்ப்பின் ஆசிரியராகவும் இருப்பதனால் இவண், படிப்பவர் புரிந்து கொள்ளும் பொருளும் அதனை மொழிபெயர்ப்பு ஆசிரியராக இருந்த புலப்படுத்தும் திறனும் ஆராயத்தக்கன. இந்நிலைகளில் பாடப்பொருள், சுட்டுப்பொருளாக மட்டும் அமைவது இல்லை. பாடச் சூழலுக்கேற்ற வகையில் பொருளுணர்த்தும் முறையும் காணப்படுகிறது. சூழல்கள் பலவகைகளில் பின்னணியாக அமைந்து பொருளைப் புலப்படுத்துகின்றன.

பொருள் என்பதனை,

1. சுட்டுப்பொருள் அல்லது அகராதிப் பொருள் (Referential & Dictionary Meaning),

2. இயைபுப் பொருள் (Semotactic Meaning)

3. தொடர் பொருள் (Syntactic Meaning)

4. மையப் பொருள் (Central Meaning)

5. ஒப்பீட்டுப் பொருள் (Compatible Meaning),

6. குறியீட்டுப் பொருள் (Symbolic Menaing)

7. சூழல் பொருள் (Contextual Meaning)

எனப் பலவகையாக மொழிபெயர்ப்புத் திறனாய்வாளர்கள் பகுத்துள்ளனர்.

சூழல் பொருள் என்பது,

அ. சமூகச் சூழல் (Social Context)

ஆ. பண்பாட்டுச் சூழல் (Cultural Context)

இ. இலக்கியச் சூழல் (Literary Context)

எனப் பல வகைகளில் உணரப்படுகிறது.

கேட்ரியானா பிக்கென் என்பவர் பொருள் வகைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைப்பார். அவர் பொருளை உய்த்தறி பொருள் (Cognitive Meaning), தொடர்பியல் பொருள் *(Communicative Meaning),* இணைத்துஅறி பொருள் (Associative Meaning) என மூன்று வகையாகப் பகுப்பார்.

1. உய்த்தறிதல் பொருள் வகைகள்

உய்த்தறிதல் பொருளில் நான்கு வகைகள் உள்ளன.
அவை வருமாறு :
அ. மொழியியல் பொருள் (Linguistic Meaning)
ஆ. குறிக்கப்பட்ட பொருள் (Referential Meaning)
இ. உட்பொருள் (Implicit Meaning)
ஈ. உரிப்பொருள் (Thematic Meaning)

மொழிபெயர்ப்பில். (இவற்றில்) உரிப்பொருள் மட்டும் இவண் விளக்கப்படுகிறது. தெரிந்த தகவலை முதல் வரியிலும் புதிய தகவலை அதன் இறுதி வரியிலும் அமைப்பதால் மூலப்பாடத்தின் உரிப்பொருள் புலனாகும். பாடக் கருவை முதல்வரியாகவோ அல்லது கடைசி வரியாகவோ அளிப்பதனை ஃபிர்பிஸ் *(Firbis, 1972)* என்பவர் 'தொடர்பியல் இயக்கத்தில் உயர் அளவை (Highest Degree of Communicative Dynamism) என்று குறிப்பிடுவார்.

2. தொடர்பியல் பொருள் வகைகள்

பிக்கெனால் தொடர்பியல் பொருளும் நான்கு வகைகளாகப் பகுத்து விளக்கப்பட்டுள்ளது.

அ. பேச்சற்ற பொருள் *(Illucutionary Meaning)*

இவ்வகை, வினாவிற்கு விடையாக அமையும் பொருள்.

ஆ. நிகழ்த்து பொருள் *(Performative Meaning)*

ஒரே சொல் விளையாட்டு, விழா, சமயச்சடங்கு போன்ற வெவ்வேறு நிகழ்ச்சிகளில் வெவ்வேறு பொருளைத் தருவதனை நிகழ்த்து பொருள் எனப் பிகிகென் வகைப்படுத்துவார்.

இ. ஊகத்து உணர்பொருள் *(Inferential Meaning)*

ஊகத்தினால் முடிவு செய்யப்பட்ட பொருளும் தொடர்பியல் பொருள் வகைகருள் ஒன்றாகும்.

ஈ. முன்னறி பொருள் *(Prognostic Meaning)*

முன்னறி பொருள் என்பது புறப்படவேண்டும் என்பதனைக் குறிக்க *'நேரமாகிவிட்டது'* எனக் கூறுவதன் மூலம் அறியப்படும் பொருளாகும்.

3. இணைத்து அறிபொருள் வகைகள்

இணைத்தறிபொருள் எழுத்தாளரின் பின்னணி, சூழல் மற்றும் மூல மொழியில் காணப்பெறும் ஒலிநய விளைவு (Sound effect) ஆகியவற்றோடு தொடர்புடையது.

பண்பாட்டுப் பொருளும் இவ்வகையைச் சாரும். குறிப்பிட்ட வாசகர் வட்டத்தில், மொழிபெயர்ப்புப் பாடம் ஏற்படுத்தும் விளைவை இனங்கண்டறிவது பண்பாட்டுப் பொருள் எனப்படும். எழுத்தாளரின் பின்னணியை அறிவதற்கு எழுத்தாளனின் சமூகமொழி (Sociolect), வட்டார மொழி (Dialect), வயது, தொழில், பால் ஆகியன பற்றி அறிவது பயனுடையதாகும்.

பிக்கெலின் பொருள் வகைகள் செய்யுள் மொழிபெயர்ப்புக்குஎனத் தனித்துப் பகுக்கப்படாததனால் இவை சான்றுகளுடன் இவ் இயலில் விளக்கப்படவில்லை. நைடா, காட்ஃபோர்டு ஆகியோர் விளக்கிய ஏழு பொருள் வகைகள் மட்டும் அவற்றை மொழிபெயர்ப்பதில் ஏற்படும் சிக்கல்கருடன் இவ் இயலில் ஆராயப்பெற்றுள்ளன.

சுட்டுப்பொருள்

மரபு வழியாகச் சொல்லுக்கு மொழியியல் அறிஞர்களாலும் மொழி பேசும் மக்களாலும் வரையறுக்கப்பட்ட / ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருள் *'சுட்டுப்பொருள்' 2* எனப்படும். இதனை ஆங்கிலத்தில் *'Referential Meaning'* என்பர். *3* அகராதிப் பொருள் *(Dictionary Meaning)* என்றும் இஃது அழைக்கப்படும். நேர்பொருள், சொற்பொருள் என்றும் இப்பொருள் வழங்கப்படும். சுட்டுப்பொருள் பொதுப்பொருளைக் குறிக்காமல், குறிப்பாக இன்ன பொருள் எனச் சுட்டும் இயல்பினதாகும்.

சொல்லை அடிப்படை அலகாகக் கொண்டு மொழிபெயர்க்கப்படும் சூழல்களில் சுட்டுப்பொருள் மொழிபெயர்ப்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது. சுட்டுப்பொருள் சொல், தொடர், உவமை, உருவகம், பொருள் என்று பல

நிலைகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. ஜி.யூ. போப்பின் திருவாசகமொழிபெயர்ப்பில் இம்முறை பின்பற்றப்பட்டுள்ளது. சொல்லுக்குரிய நேர் பொருள் அல்லது சுட்டுப்பொருளை மொழிபெயர்ப்பு முழுவதும் சீராகப் பயன்படுத்த விழையும் மொழிபெயர்ப்பாசிரியர் 'இசைவாக்கம்' *(Harmonization)* முறையைப் பின்பற்றுவர்.

சொல்நிலையில் இசைவாக்க முறை

'அருள்' என்ற சொல்லுக்குரிய நிகரனாக ஜி.யு. போப் *'Grace'* என்பதனைக் கொள்கிறார். இதனைச் சுட்டுப் பொருள்வகையினதாகக் கொள்ளலாம். 'அருள்' என்ற சொல் வருமிடங்களில் எல்லாம் *(Gratio)* என்பதே நிகரனாக இடம்பெறுகிறது.

சான்று:

அருள்நிதி - *Treasures of grace (p.208)*

அருள்புரியும் - *Bestow Thy Grace (p.216)*

எழுந்தருள் - *In Grace arise (p.11)*

இன்னருள் - *Sweet grace (p.209).*

பொருள்நிலையில் இசைவாக்க முறை

ஒரே பொருளுடைய பல சொற்கள் பல்வேறு இடங்களில் காணப்பட்டால் அவற்றிற்கு ஒரே நிகரனைப் போப் பயன்படுத்தியுள்ளார். இளமை, எளிமை என்ற பொருளில் வரும் வெவ்வேறு சொற்களுக்கும் அவர் *tender'* என்ற நிகரனைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

சான்று:

மழக்கை பூங்குயில் - *Tender hand (இளங்கை)*

பூங்குயில் -*Tender kuyil*

பந்தணை விரலி - *Tender Spouse* பொருள் நிலை யில் 'இசைவாக்க முறை' பின்பற்றப்பட்டிருப்பதனால் பெறுமொழி வாசகர்கள் மூலநூலின் கவியின்பத்தை நுகர முடியாவிட்டாலும் பொருளாழத்தை அறிந்துகொள்ள முடியும். மையக் கருத்து பெறுமொழி வாசகரைச் சென்றடைவது திண்ணம். ஆனால், மூலநூலாசிரியரின் அடைமொழிகளுக்குத் தனியாகத் தகுதி நிகரன்கள் அமைப்பது ஏற்றதன்று. அவற்றை உடன் வரும் பெயர்களுடன் இணைத்து நிகரன் காண்பது

ஏற்புடைத்தாகும். இவை வருமிடத்திற்கேற்பப் பொருள் பெறும் தன்மையினவாகும்.

குறியீட்டுப் பொருள்:

ஒரு சொல்லுக்கு நேர்பொருள், சூழற்பொருள் எனப் பலவகைப் பொருள் புலப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. அவற்றுள் குறியீட்டுப் பொருள்/ குறிப்புப் பொருள் என்பது சமய, தத்துவ நூல்களில் பெரும்பான்மையும் வழங்கப்படும். இக் குறியீட்டுப் பொருளை முறையாக மொழிபெயர்ப்பதில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும். ஏனெனில், குறியீட்டுப் பொருளுக்கு மாறாக நேர்பொருளை மொழிபெயர்ப்பில் அமைத்தால் மூலமொழிப் பாடத்தின் கருத்தை வாசகர் மாற்றிப் புரிந்துகொள்ள வேண்டும். உமார் கய்யாம் பாடல் மொழிபெயர்ப்பில் கவிமணி இச் சிக்கலை எதிர்கொண்டுள்ளார்.

கிரேக்க தத்துவ இயல், தருக்கத்தை அடிப்படையாகவும், கிறித்தவ, யூத மதங்கள் பக்தியை முக்கியமாகவும் கொண்டன. பக்தியை நெறிப்- படுத்தத் தருக்கமும் தேவை என்பதை எண்ணிய இசுலாமியர் இவ்விரண்டும் கலந்த சூஃபிய வாதத்தைத் தோற்றுவித்தனர். 4. ஆண்டவனிடமிருந்து நேரடியாகப் பெறும் அறிவில் நம்பிக்கையுடையது சூஃபியம். இவ் அறிவு, ஒளி, வெளிப்பாடு, தூ ண்டல் மூலமாகக் கிடைக்கப்பெறும். ''நூலின்றி, ஆசிரியரின்றி, அறிவுரையாளரின்றி, இவ் அறிவு தோன்றுவதாக'' ரூமி கூறுகிறார். 5 ஃபிட்ஸெரால்டில் 25-34 வரையிலான பாடல்கள் இம்மெய்யறிவு பற்றியன. இவற்றில் ஞானிகளின் ஆராய்ச்சி தருக்கம்-அதன் விளைவு, மனித அறிவும் இறையறிவும், மெய்யறிவால் விதி, இறப்பு முதலியன தெளிவு பெறுதல் போன்றவை சுறப்பட்டுள்ளன. சான்றாக,

All the saints and sages who discussed' (26)
'Doctor and Saint, heard great argument' (27)
'With them the seed of wisdom did I sow' (28)
'There was and then to more of Thee and Me'(32)

என்ற வரிகளைக் கூறலாம். ஜலாலுதீன் ரூமி என்ற சூஃபிக் கவிஞர் பற்றிய அறிவை ஃபிட்ஸெரால்டு இவண் விரித்துரைக்கிறார். அதாவது, தருக்கத்தை முதலில் விளக்கி, பின்னர் பக்தியை இறுதி முடிவாகத் தந்துள்ளார் அவர். இதனால், இவ்வரிகள் காட்டும் அறிவு உலகியலிலிருந்து மனித இனம் இறையியலுக்குச் செல்ல வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறது.

இந்திய சூஃபியம் காயசுத்தி, ஆத்ம சுத்தி, இதய சுத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்டது. சூஃபியத்தைத் தமிழகத்துக்கு தமீம் அன்சாரி அறிமுகப்படுத்தினார். 6 சூஃபியம் தமிழகத்தில் பரவுவதற்கு இங்கு வழங்கி வந்த சித்தர்களின் வாழ்க்கை நெறியும் மெய்ஞ்ஞானக் கருத்துக்களும் வாய்ப்பாக அமைந்தன. குணங்குடி மஸ்தான் சாகிபு எனும் கவிஞர் சூஃபியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் பாடினார். நாயக-நாயகி பாவம் அமைந்த பாடல்களும் இச்சூழலில் தோன்றின. சூஃபியம் இல்லறத்தை மறுக்கவுமில்லை; துறவறத்தை ஆதரிக்கவுமில்லை.

இப்பின்னணி, கவிமணி தம் மொழிபெயர்ப்பில் குறியீட்டுப் பொருளை அமைப்பதில் எதிர்கொண்ட சிக்கல்களை விளக்க உதவியாக அமையும். கவிமணி தருக்க முறையிலான அறிவை விடுத்து இதற்கு மாற்றாக இலக்கியத்தைத் தம் மொழிபெயர்ப்பில் எடுத்துக் கூறுகிறார்.

> ".....a book of verse and Thou
> Besides me singing in the wilderness
> And wilderness is Paradise enow."

என்ற வரிகளில் ஃபிட்ஸெரால்டு மெய்யறிவை (gnosis) 'A book of Verse' என்று குறிப்பிட்டுள்ளார். கவிமணி இதனைக் 'கம்பன் கவி'யாக மாற்றி, இறைவனால் தேர்ந்தெடுத்து அருளப்படும் மெய்யறிவை இலக்கிய இன்ப நுகர்ச்சியாக மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார்.

இறை வெளிப்பாடு மூலம் கிடைக்கப்பெறும் 'gnosis' அரபியில் 'marifat' அல்லது 'irfan' என வழங்கப்படும்.7 இதற்கும் உலகியலறிவான ' ilm' என்பதற்கும் வேறுபாடு உண்டு. இறை அனுபவத்தால் எய்தப்பெறும் பரவச நிலையை மது மயக்கமாகக் கொள்வதும் இறையனுபவத்தை இலக்கிய இன்பமாகக் கொள்வதும் மூலநூற் கருத்துக்கு முரண்பட்டனவாகும்.

அடுத்ததாக, 'திராட்சை ரசம் பருகுதல்' என்பது ஒரு குறியீட்டுத் தொடராக இறையருள் பெறுவதனைக் குறிக்கிறது. மறைபொருள் இலக்கியவாதிகள் திராட்சையை முழுமுதலுக்குக் குறியீடாகக் கொள்வர்.

'Better be merry with the fruitful Grape
Than sadden after none, or bitter, Fruit' (39)

‘Divorced old barren Reason from my bed
And took the Daughter of the Vine to Spuse’ (40)
Was never deep in anything but - Wine’ (41)
‘The Grape that can with Logic Absolute’ (43)

என்ற வரிகள் திராட்சையினால் பெறும் மகிழ்ச்சி இறையருளால் பெறும் இன்பத்தைக் குறிப்பதாக விளங்குகின்றன.

எகிப்தியப் பழஞ்சமயத்தில் குருதியைக் குறிக்கும் வழக்காகத் ‘திராட்சை ரசம்’ வழங்கியது. சூஃபியம், சிரியன் கிறித்தவத் தாக்கம் பெற்றதனால் இவ்வழக்கு இச்சமயத்திலும் நிலை பெற்றது. பகுத்தறிவு உலகியல் சார்ந்தது, இஃது இறையனுபவத்துக்கு எதிரானது என்பதனால் பகுத்தறிவை விலக்கிவிட்டு திராட்சையை (முழுமுதல்) மணந்ததாகக் கவிஞர் பாடியுள்ளார். கவிமணி இதனை மொழிபெயர்க்கும்போது திராட்சையை அறிவுக்கு மாறாக விளங்கும் உணர்ச்சியை மணந்ததாகப் பொருள் கொண்டு எழுதியுள்ளார்.

‘‘அல்லும் பகலும் விவேகத்தால்
அடைந்த கவலைக்கு அளவில்லை
தொல்லை நீங்க இறைவனைத்
துரத்தி விட்டுத் துணிவாகச்
செல்வி திராட்சவல்லி தரும்
தெய்வமகளை மணந்து கொண்டேன்
இல்லை துயரம் இல்லையினி
இன்பம் என்றும் இன்பமதோ

- பாடல் 73

இங்கும் குறியீட்டுப் பொருளைச் சொற்பொருளாகக் கொண்டதனால் கருத்து முரண் ஏற்பட்டுள்ளது.

உமார் கய்யாம் பாடல்களில் இறையனுபவத்தில் மூழ்கியிருக்கும் பரவசநிலை / பரவெளி நிலை / தனி நிலை காணப்படும். இதனை ஃபிட்ஸெரால்ட. The Thoughtful Soul to Solitude Retires’ என்பார்; இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியத் திறனாய்வாளர்கள் இந்நிலையைத் தமிழ்ச் சித்தர்களின் 36 தத்துவமும் நீங்கிய வெட்டவெளியோடு ஒப்பிடுகின்றனர்.8 மறைபொருள்

இலக்கியங்கள் குறிப்பிடும் 'வனாந்திரம்' அல்லது 'wilderness' என்பதும் இப் பரவெளியே ஆகும். இத்துடன்,

''வெட்டவெளியினைச் சார்ந்து ஆனந்த
வெள்ளத்தில் மிகுகளி கூர்ந்து''

என்ற கடுவெளிச் சித்தர் வரிகளை ஒப்பிடுவர். 'Solitude', 'Wilderness' என்ற சொற்கள் குறிப்பிடும் தனி நிலையைக் கவிமணி தம் மொழிபெயர்ப்பில் நீக்கியிருக்கிறார்.

'Wilderness' என்னும் குறியீட்டுத்தொடர் மறைபொருள் இலக்கிய வழக்காகும் (Apocalyptic Phrase). உலக வாழ்வில் நிறைவுற்றுப் பின் புறவுலகினின்று பிரிந்து ஆன்மா தனிநிலை அடைவதனை இச் சொல் குறிக்கிறது. இஃது உலகம் மாயை என்றோ நிலையற்றது என்றோ விலக்கிச் செல்வதன்று. இறையருளால் இந்நிலையை அடைகின்றனர்.9 பாரசீக, எகிப்திய, யூத சமயங்கள், இறைவனை அடைய வேண்டும் என்ற ஏக்கத்தால் தனியாய் நின்று ஏங்கி அழுவதனை 'Crying in Wilderness' அல்லது 'வனாந்தரத்தில் அழுவதாக'க் குறிக்கின்றன.

இஸ்லாமிய ஷரியத்தில் ஞானத்திற்குப் பிறகு நடைமுறைக்குப் பின்னர் ஞானம் வருகிறது. 10 இஞ் ஞானத்தை அடையத்துடிக்கும் நிலை வனாந்திரம் அல்லது தனிநிலை எனப்படுகிறது. இக்கருத்தினைக் கவிமண 'வனம்' என மொழிபெயர்த்திருப்பது வாசகருக்கு மொழிபெயர்ப்பின் நம்பகமற்ற தன்மையைத் தெளிவாக்குகிறது. ஆன்மாவும் இறைவனும் சேரும் நிலையை, ஆங்கிலத்தில்

'.....Me and Thee
They seemed and then no more of Thee and Me' (32)

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. 'Thee' என்பது இங்கு இறைவனைக் குறித்து வருகிறது. கவிமணி இதனை இறைவனாகக் குறிக்காமல் 'நீ' என்று பொதுவாகக் கூறியுள்ளார். இறைவனுடன் ஆன்மா இணையும் தன்மையை இறைக்காதலாகப் (Divine Love) போற்றுவர். எல்லாவற்றையும் விட்டு, கடவுளைத் தழுவியவர்களே சூஃபிக்களாவர், என்பர் ஜான்ஸன் மிஷ்ரி. 11 இதனை ' Monism' அல்லது 'Salvation by Union with the Absolute' என்பர். கவிமணி இறைக் காதலை உலகியல் காதலாகக் கொண்டுள்ளார்.

இறைவனைத் திராட்சையாகக் குறிப்பது மறைபொருளிலக்கிய வழக்கு. திராட்சைச் சாறு பருகுதல் இறையருள் பெறுவதன் குறியீடாக விளங்குகிறது. இதனை வெறும் மதுவாகக் கொண்டு கவிமணி பாடியுள்ளார். இறைவனைக் குறிக்கும் இடங்களில் அவர் பெண்ணைக் குறித்துள்ளார்.

"பெண்ணே! கிண்ணம் நிறையம்மா!" (71)
"வண்ணக் கிளியே! ஒரு கிண்ணம், மதுவை ஊற்றித் தருவாயே (72)
வாழ்வின் கின்னமது
வற்றி வறண்டு போகும் முன்னம்
பருக மதுவைத் தாரீரோ?
பாய் விட்டெழுந்து வாரீரோ?
அருமை மங்கைமாரோ"
"கிண்ணம் நிறைய எனக்கு
இனிய மது நீ வார்த்திடம்மா" (77)

என்ற வரிகளைச் சான்றாகக் காட்டலாம். நூல் முழுவதும் சீராக 'மது' 'திராட்சை ரசம்' ஆகியவற்றைக் குறியீட்டுப் பொருளில் வழங்காமலும், பிற்பகுதியில் நிலையாமை பற்றி வலியுறுத்தியதனாலும் நூலின் மையக்கருத்து எபிகியூரியக் கருப்பொருளை ஒத்ததாகக் காணப்படுகிறது. சூஃபியத் தத்துவத்தில் இறைமையைப் பெண்ணாகப் படிமம் செய்தனர். இபுன் ஏல் அரபி என்பவர் இப் படிமத்தை அளவுக்கதிகமாகக் கையாண்டதனால் தெய்வ நிந்தனைக் குற்றத்திற்குள்ளானார். எனவே உமார் கய்யாம் பாடல்களில் காணப்படும் பெண்மை பற்றிய செய்திகளை இறைமை பறீறிய செய்திகளாகக் கொள்வதே பொருத்தமுடையதாகும். பெண்ணாகக் கருதிப் பொருள் கொள்வது தவறான மொழி பெயர்ப்பைத் தந்துவிடும்.

இதுகாறும் விளக்கியவற்றால் சுட்டுப் பொருளைக் குறியீட்டுப் பொருளுக்குப் பதிலியாக உணர்த்துவதில் ஏற்படும் சிக்கல்களை உணரலாம்.

ஒப்பீட்டுப் பொருள்

ஒரு சொல்லிற்கு வழங்கப்படும் பல பொருள்களுள் தொடர்புடைய பொருள்கள் வழங்குதல் உண்டு. இத் தொடர்புடைய பொருள்களுள் மூல மொழிச் சொல் குறிக்கும் பொருளைத் தெளிவாக வரையறுப்பதே மொழில் பெயர்ப்பாசிரியரின் முதல் கடமையாகும். இவ்வாறு வரையறுக்காவிடில் ஒரே

பொருட்களத்தில் அமையும் பல சொறீகள் *(words in the same semantic field)* மூலமொழிச் சொல்லிற்குரிய மொழிபெயர்ப்பு நிகரன்களாகத் தோன்றக்கூடும்.

சான்றாக, திருக்குறள் 'கடவுள் வாழ்த்து' மொழிபெயர்ப்பில் 'சேர்ந்தார்' எனும் மூலமொழிச்சொல்லுக்கு மொழிபெயர்ப்பாசிரியர்கள் அளித்துள்ள நிகரன்கள் பலவாக இருப்பதனைச் சுட்டிக் காட்டலாம். *12* 'சேர்ந்தார்' எனும் இச்சொல்லுக்குச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி ஒன்றுகூடுதல், கலத்தல், நட்பாதல், இயைதல், உரித்தாதல், இடைவிடாது தியானித்தல் என்று பொருள் தருகின்றது. ஃபப்ரீஷியஸ் நிகண்டு கூட்டு, இசைவு, கலப்பு, இணைப்பு, ஏற்றுக்கொள் என்று பொருள் தருகிறது. இச்சொல்லுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் அளிக்கும் சொற்களாவன:

ஜி. யூ. போப் – *gain*
எஃப்.டபிள்யூ. எல்லிஸ் – *adore*
ட்ரூ – *united*

இச்சொல் ஒவ்வொன்றிற்கும் உரிய சொற்பொருளையும், சமயப் பொருளையும் ஆராய்ந்தால் இத் தேர்ந்தெடுப்பின் பின்னணியை அறிய முடியும்.

ஜி.யூ. போப் பயன்படுத்திய *'gain'* 'மிகையாகப் பெற்ற என்ற பொருளில் வரும் வர்த்தகச் சொல்லாகும். இதற்குக் கிறித்தவ சமய அகராதி *dishonest, price, hire, increase, work greedy, trading* என்று பொருள் தருகிறது.*13* இச்சொல் சமயப்பொருள் பெற்றதன்று. இறையியல் பின்னணியில் இதனை எடுத்தாளவில்லை. மனிதன் பெறும் 'மிகுபயன்' இறைவடி சேர்தல் என்ற பொதுப்பொருளில் இதனைப் பயன்படுத்தியிருக்கிறார் போப் என்று கூறலாம்.

எல்லிஸ் *'adore'* என்னும் சொல்லை எடுத்தாண்டுள்ளார். இச் சொல், *worship, honour, venerate, idolize, reverence* என்ற பொருளில் வரும். இதற்குரிய மூலவடிவம் இலத்தீன் மொழியின் *ad+orare* என்பது. இதன் பொருள் *'to speak'* என்பதாகும். *14* இஃது இறைவனைச் சொற்களால் போற்றித் துதித்தலைக் குறிக்கிறது.

1. அடோரயீம் *(adorain)* எனும் பன்மை வடிவம் *(double honour)* மதிப்புகள் என்ற பொருளைத் தரும்.

2.அடோராம் (adoram) எனும் ஒருமை வடிவம் பெருமதிப்பு *(high honour)* என்ற பொருளைத் தரும். இவை யிரண்டும் *'மதிப்பு'* என்னும் பொருளை விளக்குகின்றனவேயன்றி *'சேர்தல்'* எனும் பொருளைக் குறிக்கவில்லை. எனவே *'adore'* எனும் நிகரன் இறைவனைப் போற்றுதல் எனும் பொருளை அளிப்பது தெளிவாகிறது.

ட்ரூ பயன்படுத்தியிருக்கும் 'united *'* என்பது *'ஒன்று கூடுதல்'* என்னும் பொருளையுடையது. இதன் பெயர் வடிவம் *(*noun form) என்பதாகும். இதன் அடிச்சொல்லான 'Uni', கிரேக்கச் சொல் *(*Grk. EVOTES) ஹேனோட்டேன்ஸ் என்பதிலிருந்து தோன்றியது. *15* இதற்குரிய எபிரேய வடிவம் *'யாகர்'* என்பதாகும். இதற்கு 'at one 'together', என்பன பொருளாகும். 'union' என்பதற்குக் கிறித்தவச் சமய அகராதி தரும் பொருள், 'enter fully into his presence' என்பதாகும். 'Union of God' என்ற தொடர் கடவுளுடன் இணைவதனைக் குறிக்கிறது. இஃது (EV Xpisto.Grk) கிறிஸ்துவுக்குள் (in Christ) என்று இன்றும் எழுதப்படுகிறது. இஃது இரு வகைப்படும். 1. faith union of the soul with God, 2. metaphysical union of God with soul. *16* முதலாவது, மனிதன் இறைவனிடத்தில் காட்டும் அன்பு. இரண்டாவது, இறைவன் மனிதனைத் தேர்ந்தெடுக்கும் கருணை. மனிதன் இறைவனுடன் அன்பினால் இணைவதை *'a loving communion'* என்கின்றனர். *17* இப்பின்னணியில் ட்ரூ *'united'* என்பதனைச் *'சேர்ந்தார்'* என்பதற்குப் பயன்படுத்தியிருக்கிறார் என்று கொள்வது பொருத்தமுடையதாகும். ஜி. யூ. போப் சமயப் பின்னணியில்லாத பொதுச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். எல்லீஸ், *'போற்றுதல்'* எனும் பொருளைத் தரும் சொல்லை எடுத்தாண்டிருக்கிறார். ட்ரூ உரிய பொருளுடைய சமயச் சொல்லை அளித்திருக்கிறார். ஆனால், இவர்களில் எவரும் பயன்படுத்தாத *'abide'* என்னும் கிறித்தவ சமயச் சொல்லை, இந்திய மொழிபெயர்ப்பாளரான திருவாசகமணி எடுத்தாண்டுள்ளார். 'abide' என்றால் 'to go in', 'enter', 'come', *'to be joined'*என்று அகராதி, பொருள் தருகின்றது. *18* 'Abide in me' என்ற சமயத் தொடர் *'*என்னுள் உறைக*'* என்னும் பொருளில் வழங்குகிறது. இதனை இன்றும் அன்றாட வழக்கில் சமய வாழ்வு வாழ்வதாகக் கருதுபவர்கள் *'*கிறிஸ்துவுக்குள்*'* என்று பயன்படுத்துகின்றனர். *Abide* என்பது பொருளைப் புலப்படுத்துகிறது. ஆயினும், இதனைக் கிறித்தவ மொழி பெயர்ப்பாளர் எவரும் பயன்படுத்தாதது வியப்பைத் தோற்றுவிக்கிறது.

துடி, தமருகம், உடுக்கை

டாக்டர் இரா. கலைக்கோவன், கண் மருத்துவர், வரலாற்று ஆய்வாளர், திருச்சி

சிவபெருமானின் ஆடலொடு தொடர்புறும் தோலிசைக் கருவிகளுள் துடி, தமருகம், உடுக்கை இம்மூன்றும் முதன்மையானவை. ஆடும் இறைவனின் கையில் இலங்கும் இடைசுருங்கு பறைகளான இவை, அமைப்பிலும் இயக்கும் முறையிலும் வேறுபடுவதுடன், அவரது செயற்பாட்டிற்கேற்பவே கைக்கொள்ளப்படுகின்றன. இப்பறைகளின் வரலாறும் அதை வரைந்து காட்டும் இலக்கியம், கல்வெட்டு, சிற்பப் பின்னணிகளும் சுவையானவை.

துடி

இம்மூன்று இசைக்கருவிகளுள் காலப் பழைமையது துடி. தமிழ்நாட்டுப் பண்பாட்டு வரலாற்றில் பண்டுதொட்டே மக்கள் வாழ்க்கையோடு ஒன்றிய தோலிசைக்கருவியாகத் திகழும் இது குறித்த தரவுகள் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டிலும் எட்டுத்தொகையிலும் விரவியுள்ளன. துடியின் அமைப்பு, அதை இயக்கும்முறை, எவ்வக் காரணங்களுக்காக அது இயக்கப்பட்டது, அதனின்றெழும் ஒலியின் தன்மை, அதன் இசைக்கமைந்த ஆடல்முறை, அவ்வாடலை நிகழ்த்தியவர்கள், இயங்காக் காலங்களில் கருவி இருத்தப்பட்ட இடம் எனப் பல செய்திகள் சங்க இலக்கியங்களில் செறிந்துள்ளன.

துடியின் அமைப்பு

வலிய முகத்தினையுடைய கடிய துடி எனும் அகச்சுட்டலால் (261) கருவியின் திண்மையும், செறிந்தும் நெகிழ்ந்தும் இயையும் வள் (வார்) கொண்டது எனும் குறிப்பால் (அகம் 372), தாளத் தன்மையை மேம்படுத்தவும் குறைக்கவும் இக்கருவியில் விரல்களால் இயக்கும் வார் இருந்தமையும் தெளிவாகும். 'துடி அடி அன்ன தூங்குநடைக்

குழவியொடு பிடி புணர் வேழம்' எனும் பாடலடி வழி, யானைக்குட்டியின் பாதம் போல் இது இருந்ததாகப் பொருநராற்றுப்படை (125) விளக்க, துடியின் முழக்கப்படும் பகுதியை வலிய வாய் (வல் வாய்), அழகிய வாய் (அவ்வாய்க் கடுந் துடி) என்கிறது அகம் (79). அதன் அடிபடும் கண், வரால்மீனின் துண்டம் போல் இருந்ததாக ('வராஅல் துடிக்கண் கொழுங் குறை - அகம் 196, கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்'- ம. காஞ்சி 320) சங்கப்பாடல்கள் சுட்ட, வலிய அக்கண்ணில் (வன் கண்- புறம் 170) தட்டியே துடி முழக்கப்பட்டது.

பயன்பாட்டில் இல்லாத காலத்தே துடி, வீட்டின் முன்னிருந்த திரண்ட கால்களுடைய பந்தலில் அம்புக்கட்டுகளுடன் தொங்கவிடப்பட்டிருந்தது (பெரும். 124). துடியைப் பெண்களின் இடைக்கு ஒப்பிடும் போக்கு அதன் இடைசுருங்கிய அமைப்பை ஒட்டியே வழக்கானது.**1**

துடியின் ஒலி

'கனைகுரல் கடுந்துடி', 'கனையும் கடுந்துடி' எனும் அகப் பாடலடிகள் (159, 79) துடியின் ஒலி, விலங்குகள் கனைத்தலால் வெளிப்படும் ஓசை போல் கடுமையாகவும் பெரும் ஆரவாரத்துடனும் இருந்தமை சுட்ட, அக, புறப்பாடல்கள் (19, 370), மிகு ஒலி எழுப்பும் தோலிசைக்கருவியாக விளங்கிய துடியின் குரலைப் பேராந்தையின் கூவலுடன் ஒப்பிட்டுத் துடியிசை அச்சம் தருவதாக விளங்கியதென்கின்றன. ஒருகால் இணைந்தும் ஒருகால் தனித்தும் அயலோர் அலர் கூறுமாறு போலத் துடியின் ஒலியும் பெருக விளைந்தும் சற்றே தணிந்தும் இருந்ததென்கிறது அகம் (62). மலைமீதிருந்து வீழும் அருவியின் பேரோசை போல் துடியொலி இருந்ததாகப் பழமொழி நானூறு (270) பகர, செந்நாயின் குரல் போல் ஒலித்ததாக நூலொன்றின் குறிப்பு சுட்டுகிறது.**2**

இயக்கும் முறை

ஒரு கையால் துடியைப் பற்றி மறு கையால் அதை இயக்கியவர்கள் தாழக் கொட்டியதாக அகம் பேச (89), வலிய கை சிவக்குமாறு வலிமையுடன் முழக்கிக் கொட்டியதாகப் புறம் கூறுகிறது.**3** துடியின் தாளங்களைச் சுட்டும் பரிபாடல் (21), 'கேள்வன் உருட்டும் துடிச்சீர்' என்பதால், இயக்கம் உருட்டலாகவும் அமைந்தமை அறியப்படும். குறுந்தடி கொண்டும் துடி இயக்கப்பட்டது.**4**

இயக்கிய இடங்களும் இயக்கியவர்களும்

பசுக்களைக் கவரும் அல்லது மீட்கும் ஆகோள் பூசல்களும் (வெட்சி, கரந்தை) வழிச்செல்வாரை மறித்துக் கொள்ளையிடும் நிகழ்வுகளும் துடி இசைக்கப்பட்ட பொதுவான களங்களாக அமைந்தன. 'கொடுவில் ஆடவர் ஆகொள் பூசலிற் பாடு சிறந்தெறியும் பெருந்துடி', 'பூசல்துடி', 'ஆடுதொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடிக் கொடுவில் எயினர்' எனும் பாடலடிகள் (அகம் 372, 379) இதனை நிறுவும். பாலைமறவர்களும் எயினர்களும் துடியை முழக்கி ஆடினர். பாரம் மிக்க கழுதைகளின் நிரையைப் பின்பற்றி வரும் வணிகக்கூட்டத்தின் வாளுடை வீரர்களை வாட்டி, அவர்தம் தலையறுத்து, அரிய அணிகலன்களைத் திறையாகப் பெறும் போர்க்களத்தே, துடியினைத் தாழக் கொட்டி வென்றவர் ஆடிய காட்சியை அகப்பாலைப் பாடலொன்று (89) விரித்துரைக்கிறது. பெற்ற கொள்ளைப்பொருளைத் தமக்குள் அவர்கள் பிரித்துக்கொண்டதாகவும் அப்பாடல் கூறுகிறது.

எயினர்களாலும் பாலைமறவர்களாலும் அவர்தம் போர்ப் பறையாகவும் நடுகல் வழிபாட்டின்போது வீரத்தின் வெளிப்பாடாகவும் ஒலிக்கப்பெற்ற இடைசுருங்கு பறையான துடி, 'மறங் கடைக்கூட்டிய துடிநிலை' எனும் துறை உருவாக வழிவகுத்தது.5 அதை ஒலிப்பதற்கென்றே புறநானூற்றுக் காலத்தே சிலர் அமைந்தனர். பகலெல்லாம் வேட்டையாடித் திரிந்து தம் வில்லால் பெற்ற உணவைப் புழுக்கி உண்பாரின் நடுவே இழிபிறப்பாளனாகிய புலையன் தன் வலிய கை சிவக்க முடுக்கிக் கொட்டும் வலிய கண்ணையுடைய அச்சம் தரும் துடியின் ஒலி எனும் பொருள்பட அமைந்த புறப்பாடலும் (170) 'துடி எறியும் புலைய' எனும் பாடலடியும் இதை நிறுவுகின்றன. இதை இசைத்தவர்கள் துடியன் குடியினராய் அறியப்பட்டனர்.

பரிபாடல் காலத்தில் (பொ. கா. 4 - 5ஆம் நூற்றாண்டு) விழாக்களின் போதும் துடி ஒலிக்கப்பெற்றது. புதுவெள்ளம் வருவதைக் கொண்டாடிப் புனல் பரந்ததென்று துடி முழக்கினர் (7:28). கணவன் உருட்டிய துடியின் தாளத்திற்கு முத்துமாலை அசைய ஆடிய இல்லாளின் காற்சிலம்பின் பரல்கள் ஒலித்தன. அடி

பெயர்த்து முறையாகத் தோளசைத்து அப்பெண் ஆடியமையை, 'துடிச்சீர்க்குத் தோஞ்ழ் பெயர்ப்பவள்' என்கிறது பரிபாடல் (21:18-19, 60-66). தோளசைத்துத் தூக்கி அப்பெண் ஆடியபோது, அம்பு பிறழ்தல் போல அவள் கண்களும் பிறழ்ந்தனவாம். சங்க காலத்தின் முற்பகுதியில் பெரும்பாலும் பாலைநில ஆடலாக ஆடவர்களால் நிகழ்த்தப்பட்ட துடிக்கான ஆடல், சங்ககாலத் தைத் தழுவி மலர்ந்த பரிபாடல் காலத்தே, மருதநில ஆடலாகவும் வடிவெடுத்து மகளிர் அதில் பங்கேற்குமாறும் அமைந்தமை கால நிரலான இலக்கியச் சான்றுகளால் புலனாகிறது.7

காப்பியக் காலத்தில் முடுக்குத் தெருக்களில் ஊர்க்காப்பாளரால் ஒலிக்கப்பெறும் இசைக்கருவியாகவும் மாறிய துடி (மணி 7:69), எயினருடன் தொடர்ந்தமையைத் துடியுடனே சிறுபறையும் கொம்பும் வெடித்தல் ஓசையுடன் முழங்க, அரையிருளில் எயினர் தம் இருப்பிடத்தினின்றும் வந்தமை காட்டும் சிலம்பின் அடிகளால் (12:20) தெளிவாகிறது. வீரர், புலையர், காவலர் எனப் பலர் கை விளங்கிய துடி, சிலப்பதிகாரக் காலத்தில் முருகனைச் சேர்ந்தது. 'சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்' எனும் சிலம் படி (6:51), வெற்றியைக் கொண்டாடித் துடி முழக்கி முருகன் ஆடிய வெற்றிக்கூத்தைப் பதினொரு ஆடல்களுள் ஒன்றாக உயர்த்திப் பிடிக்கிறது. இத்துடிக்கூத்து எழுவர்அன்னையராலும் ஆடப்பெற்றதாகப் பிங்கல நிகண்டு (ப.215) சுட்ட, கொற்றவையாலும் நிகழ்த்தப்பெற்றதாகக் கூறுகிறார் ஆளவந்தார்.8

தலைவனின் தூதாக ஊடல் தீர்க்க வந்த பாணனை நோக்கி, 'துடியின் இடக்கண் அனையம் யாம் ஊரற்கு, அதனால் வலக் கண் அனையார்க்கு உரை' என நகையாடிப் பாடிய நாலடியார் காலத் தலைவி, வலம், இடம் என இரு கண்கள் பெற்றிருந்தபோதும் துடியின் வலக்கண்ணே முழக்கப்பட்டது என்பதை அழகுபடப் பதிவுசெய்துள்ளார்.9

துடியின் மாறுபட்ட பயன்பாடு

பகைவரை அச்சுறுத்தும் நோக்கில் ஆகோள் பூசலிலும்**10** வணிகச்சாத்துகளை வழிமறித்துக் கொள்ளையிட்ட சூழல்களிலும் போர்ப்பறையாக ஒலித்த துடி, வெற்றியைக் கொண்டாடவும் வருகையைத் தெரிவிக்கவும் களிப்பை வெளிப்படுத்தவும் நடுகல் வழிபாட்டில் வீரம் போற்றியும் இயக்கப்பட்டதுடன், தற்காப்பு நோக்கில் போர்க்கருவியாகவும் பயன்பட்டது. அருவியெனப் பாய்ந்து வரும் அம்புகள் எனும் பேராற்றின் முன்நின்ற கரந்தைவீரன், தன் கையிருந்த துடியையே புணையாகக் கொண்டு பகைவரை வென்று நிரைமீட்டுக் கல்லானான் எனும் புறப்பாடல் *(260)* சுட்டும் துன்பியல் வரலாறு நடுகல்லின் பெருமையோடு துடியின் களம் சார்ந்த பயன்பாட்டையும் கண்முன் நிறுத்துகிறது.

பத்திமைக் காலத் துடி

பத்திமைக் கால முன்னோடியாகக் கருதப்படும் காரைக்காலம்மை தம் மூத்த திருப்பதிகத்தில் *(11:2:9)* இறையாடலுக்கு உகந்தனவாகப் பல புதிய இசைக்கருவிகளை அறிமுகப்படுத்துகிறார். அவற்றுள் தோல்கருவிகள் *9.* சச்சரி, தக்கை, தகுணிச்சம், மத்தளம், கரடிகை, குடமுழா, மொந்தை, துந்துபி, தமருகம் எனும் அவை ஒன்பதுமே சங்க, காப்பிய வழக்குப் பெறாதவை. காற்றுக் கருவியாகக் கொக்கரையும் *(*சங்கு*)* நரம்புக்கருவியாக வீணையும் கஞ்சக் கருவியாகத் தாளமும் அம்மையால் இணைக்கப்பட்டுள்ளன. அம்மையின் இப்பட்டியலில் துடி இல்லை. ஆனால், தம் பதிகத்தின் வேறோரிடத்தில் *(11:2:2:9)*, 'படு வெண் துடியும் பறையுங் கறங்கப் பரமன் ஆடுமே' என்று துடியின் இசைக்கு இறைவன் ஆடியதாகக் குறிக்கிறார். அம்மை சுட்டும் தோலிசைக் கருவிகளுள் சிறப்புப் பெறுவது தமருகம். பிற கருவிகளைப் பெயர் மட்டும் சுட்டிச் சொல்லும் அம்மை, தமருகத்தைக் குறிக்கையில், 'வன்கை மென் தோல்' என்று பெருமைப்படுத்துகிறார்.

அம்மையைப் பின்தொடர்ந்து பத்திமை இலக்கியங்கள் படைத்த நாவுக்கரசரும் சம்பந்தரும் இறையாடலைப் பெரிதும் போற்றுவதுடன், அவ்வாடலுக்கு இசையளித்த கருவிகளையும் இறைவன் கைப்பிடித்த கருவிகளையும் தத்தம் பதிகங்களில் பதிந்துள்ளனர். இருவருமே இறையாடலுக்குத் துடியின் முழக்கம் துணையிருந்ததாகக் கூறுகின்றனர். 'துடிகளோடு முழவும் விம்மவே' என்ற சம்பந்தரின் சுட்டல் *(1:28:6)*, இறையாடலுக்குப் பல துடிகள் கறங்கியமை காட்ட, 'கறங்கு துடியின் முழக்கும்',

'துடியாம் துடியின் முழக்கந்தானாம்' என்றெல்லாம் இறையாடலின் சூழல் காட்டும் நாவுக்கரசர், *(4:2:6, 6:15:8)* 'துடி கொண்டகையும்' *(4:81:6)* என்று தொடங்கி, இறைவன் எந்தெந்தக் கோலங்களில் துடி கொண்ட கையராய் விளங்கினார் என்பதையும் கூறுகிறார்.

இறைவன் பிச்சையேற்ற கோலத்தில் துடி முழக்கிச் சென்றமையை, 'துஞ்சிடையே வந்து துடியும் கொட்டத் துண்ணென்று எழுந்திருந்தேன்' என்று பெண் பாடுமாறு *(6:13:6)* கூறுவதுடன், 'துடியுடை வேடராகி' *(4:50:1)* எனச் சொல்வதன் வழி, கிராதார்ச்சுனக் கோலத்தில் சிவபெருமான் துடி கொண்டவராய் இயங்கியமையையும் பதிவுசெய்கிறார். திருமாளிகைத்தேவர், 'கணிஎரி விசிறு கரம் துடி விடவாய்க் கங்கணம் செங்கை மற்றபயம் பிணிகெட இவை கண்டுன் பெருநடத்தில்' என்று தம் கோயில் திருப்பதிகத்தில் *(9:16)* ஆடும் இறைவனின் கைப்பொருளாய்த் துடியைக் காண்கிறார்.

தமருகம்

அம்மை வழி அறிமுகமாகும் தமருகம் இறைக்கோலத்தில் இணைவதை, 'சங்கக் கலனும் சரி கோவணமும் தமருகமும் அந்திப்பிறையும் அனல்வாய் அரவும்' எனக் காட்டும் நாவுக்கரசர் *(4:111:2)*, அது இறைவனின் வேழம் உரித்த காலபைரவக் கோலத்தில் அவர் கைப்பொருளாய் இருந்தமையை, 'சூலம் வெடிபடும் தமருகம் கை தரித்து ஓர் கோல காலபைரவனாகி வேழம் உரித்து' எனும் பாடலடியால் *(4:73:6)* பதிவுசெய்கிறார். இறைவனின் கைப் பொருள்களைக் குறிக்குமிடத்து, 'மழுவும் தமருகமும் எரியும் கையில் தோற்றவன்' என்று தமருகம் இறைவன் கையில் இருந்த மையை உறுதிசெய்கிறார் *(6:64:3)*.

இறைக்கோல வண்ணனைகளின்போது, 'தலையிலங்கும் பிறை தாழ்வடம் சூலம் தமருகம் அலையிலங்கும் புனல் ஏற்றவர்' என்றும் *(3:9:4)*, முத்தலைஈட்டி மழு மான் முறைமுறை ஒலி தமருகம் முடைதலை கணிச்சி தீகொண்ட கைகள் என்றும் கூறித் தமருகத்தை இறைவன் கைப்பொருளாய் சம்பந்தரும்

உறுதிப்படுத்துகிறார் (1:22:6). இறைவன் ஆடும்போது அவர் கையில் தமருகம் விளங்கியதை, 'கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரியபாம்பும்' எனச் சுந்தரரும் (7:90:1) 'தழலும் தமருகமும் பிடித்தாடி' என்று கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் நம்பியாண்டார் நம்பியும் (11:32:63) சுட்ட, 'தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை தமருகம் திருவடி திருநீறு இன்னகை மழலை கங்கை கொங்கிதழி இளம்பிறை குலைவளர் இளமான் கின்னரம் முழவம் மழலை யாழ் வீணை கெழுவு கம்பலை செய் கீழ்க்கோட்டூர் மன்னவன் மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தன்' என்று இறைவனோடு இணைந்திருந்த தமருகத்தைக் கருவூர்த்தேவரின் திருவிசைப்பா அடையாளப்படுத்துகிறது (9:10:8). பட்டினத்துப் பிள்ளையார் தம் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில், 'மூவிலை வேலும் பூவாய் மழுவும் தமருகப் பறையும்' என்றும் (11:28:35), கல்லாடம், 'எரி நவ்வி மழு தமருகம் அமைந்த நாற்கரம்' என்றும் ((60:27-28)) தமருகம் இறைவன் கை இசைக்கருவியாய்ப் பிற்காலத்தும் தொடர்ந்தமை காட்டும்.

வெடிபடும் தமருகம், முறைமுறை ஒலி தமருகம் எனும் தொடர்கள் இறைவன் அவ்விசைக்கருவியை இயக்கியபோது தோன்றிய ஒலியின் அளவையும் கருவி இயக்கப்பட்ட பாங்கையும் சுட்டுகின்றன. 'கரைகடல் ஒலியின் தமருகத் தரையிற் கையினிற் கட்டிய கயிற்றால் இருதலை ஒரு நா இயங்க' எனும் கருவூர்த்தேவரின் திருவிசைப்பாப் பாடலடி (9:14:3) தமருகத்தின் வடிவத்தையும் அது இயங்குமாற்றையும் அது எழுப்பிய ஒலியின் அளவையும் தெற்றெனத் தெரிவிக்கிறது.

இரு வாய்களிலும் தோலால் மூடப்பெற்று வார்களால் இணைக்கப்பெற்ற இடைசுருங்கிய சிறு பறையான அதன் இடையைச் சுற்றியுள்ள கயிறு, வார்களின் மேல் சுற்றியிருக்கும். அதன் முனையிலுள்ள நெட்டி அல்லது உலோகத்தாலான உருண்டை, கருவியைக் கையில் வைத்துப் பக்கவாட்டில் அசைத்தாட்டுகையில் தமருகத்தின் இருவாய்களிலும் மோதி ஒலி எழுப்பும். இணைப்பு வார்களின் மேல் நிகழும் விரலழுத்தம் வேண்டும் தாள ஒலி தரும்.

உடுக்கை

உடுக்கப்பெற்ற ஆடையைக் குறிக்க சங்க, காப்பியக் காலத்தே வழக்கிலிருந்த உடுக்கை எனும் சொல், பத்திமைக் காலத்தே

தோலிசைக்கருவியையும் சுட்டியது. சிவபெருமானின் ஆடலுக்குத் தாளம் தக்கையோடு உடுக்கையும் இசையளித்ததாக சம்பந்தர் பாடுவார் (1:65:10). சம்பந்தரின் இந்த ஒரு சுட்டல் தவிர உடுக்கையைப் பிற பத்திமையாளர்களின் பாடல்களில் காணக்கூடவில்லை. பல்வேறு தோலிசைக்கருவிகளைக் குறிக்கும் கல்லாடமும் துடி என்ற சொல்லையே பெய்துள்ளது. பிங்கலம், 'துடியே உடுக்கை' எனச் சுட்டுவதால்,11 சங்ககாலத்தில் பெருவழக்காயிருந்த துடியே காலப்போக்கில் உடுக்கை என்றும் அழைக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

மண், மரம், பித்தளையால் செய்யப்பட்ட உடல் கொண்ட இடைசுருங்கிய பறையான உடுக்கையின் இரு வாய்களிலும் தோல் அடைத்து அதன் துளைகள் வழி இரு வாய்களிலும் மாறிமாறி நீள்கயிற்றால் பிணைத்துக் கயிற்றைச் சுற்றி நடுவில் நாடாவை இணைத்து உடுக்கை அமையும். இடக்கையால் கருவியைப் பற்றி விரல்களால் நாடாவை அழுத்தியவாறே வலக்கையால் முழக்கு வதன் வழி வேண்டிய தாளங்கள் பெறப்படும். தமருகம் போலன்றி உடுக்கையை இயக்கத் துடி போலவே இரு கைகள் தேவை.

இலக்கிய வழக்கில் அருகியுள்ள உடுக்கை, சோழர் காலக் கல்வெட்டுகளில் இசை, ஆடலுடன் தொடர்புடைய தோலிசைக் கருவியாகக் குறிக்கப்படுகிறது. திருவிடைமருதூர்க் கோயிலிலுள்ள முதல் பராந்தகரின் 27ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (SII 5:721), இறைவன் முன் மூன்று வேளையும் உடுக்கை வாசித்த கலைஞருக்கு வாழ்வூதியமாக விளங்குடியிலிருந்த இறைவன் நிலத்தில் முக்கால் வேலி தரப்பட்டமை கூறுகிறது. மூன்றாம் குலோத்துங்கசோழரின் 12ஆம் ஆட்சியாண்டுக் காலம்வரை ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் இக்கோயிலில் உடுக்கைக் காணி தொடர்ந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுள்ளது (SII 5 : 706).

சிராப்பள்ளி மாவட்டம் திருஎறும்பியூர்க் கோயிலிலுள்ள கண்டராதித்த சோழரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (SII 13 : 51), நான்கு அடிகள்மார் உடுக்கை, தாளஇசையுடன் மூன்று சந்தியும் அங்குத் திருப்பதியம் பாடியதாகக் கூறுகிறது. தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்திலுள்ள இரண்டு கல்வெட்டுகளுள் (SII 2: 65, 66) ஒன்று, அங்குப் பணியாற்றிய 48 பிடாரர்களும் இறைத்திருமுன் திருப்பதியம் பாடியபோது, சூரியதேவ கிரமவித்தனான ஆலாலவிடங்க உடுக்கை விச்சாதிரனான சோமசிவன் உடுக்கை வாசித்ததாகக் கூற, சோழர் கால ஆடற்கலை உறைவிடப்பள்ளிகள் குறித்து விரிவான தரவுகளை வழங்கும் தளிச்சேரிக்

கல்வெட்டு, அங்கு ஆடல்நிகழ்த்திய 400 ஆடலரசிகளுக்கும் இசை வழங்கிய கலைஞர்களுள், உடுக்கை வாசித்தவர்களாக வீரசோழன் விடங்கனான இராஜராஜ ஸ்ரீஹஸ்தனையும் கூத்தன் ஆதித்தனான இராஜராஜ சஹஸ்ரபாகுவையும் குறிக்கிறது. முதல் இராஜராஜர் காலத்தே தாதபுரம் குந்தவை விண்ணகரத்தில் திருவிழாநாள்களில் அவ்வூர் இரவிகுலமாணிக்க ஈசுவரத்தைச் சேர்ந்த 32 தளிச்சேரிப் பெண்டுகளும் பாடி, ஆடியபோது பாடவியமும் உடுக்கையும் வாசிக்கப்பெற்றன.**12**

திருவையாறு ஐயாறப்பர் கோயில் வளாகத்தின் வடகயிலாயத்திலுள்ள முதலாம் இராஜராஜரின் 24ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டில் ஒன்று, அங்கு உடுக்கைக் கலைஞர்கள் இருந்தமை சுட்ட,**13** மற்றொன்று (SII 5 : 521), 'செம்பில் மேற் பொந் கடுக்கின பாவைக்கண்ணாடியில் ஆடுகிற பாவை ஒன்று மத்தளம் கொட்டுகிற பாவையொன்று உடுக்கை வாசிக்கிற பாவையொன்று பாடுகிற பாவையொன்று பீடமொன்று உள்பட கண்ணாடியொன்று' என்பதன் வழி, இடைச்சோழர் காலத்தே மத்தளத்துக்கு இணையாக ஆடலுக்கு உகந்த இசைக்கருவியாக உடுக்கை விளங்கியமை தெரிவிக்கிறது.

ஸ்ரீபெரும்புதூர் வட்டம் சிவபுரம் சிவன்கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்ட முதலாம் இராஜாதிராஜரின் 27ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (ARE 1961-62 : 234), இராஜராஜ ஈசுவரம் எனும் பெயருடன் விளங்கிய அக்கோயிலில் ஆதித்தவாரப் பெரும்பலி தோறும் (ஞாயிறு) நிகழ்ந்த ஊர்வலத்தில், 24 பதியிலார் ஆடியதையும் அதற்குப் பாடவியம், வீணை, உடுக்கை முதலிய இசைக் கருவிகள் இசையளித்ததையும் தெரிவிக்கிறது.**14**

உடுக்கையைக் குறிக்குமாறு போலத் துடி சுட்டும் கல்வெட்டுகள் இல்லாமையின், பிங்கல மொழிவுக்கேற்பச் சோழர் காலத்தில் துடி உடுக்கையாகப் பெயர்மாற்றம் கொண்டதாகக் கொள்ளலாம். முதலாம் இராஜராஜர் காலத்தில் தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துக்குப் பொன்னால் செய்தளிக்கப்பெற்ற சேத்ரபாலர் திருமேனியைக் குறிக்கும் கல்வெட்டு (SII 2 : 1), இறைவன் நான்கு திருக்கைகளிலும் பிடித்திருந்த பொருள்களாகச் சூலம், பாசம், கபாலம், தமருகம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

சிற்பங்களில்

தமிழ்நாட்டில் காணக்கிடைக்கும் காலத்தால் முற்பட்ட இறையாடல் சிற்பம் முதலாம் மகேந்திரவர்மரின் சீயமங்கலம் அவனிபாஜன பல்லவேசுவர கிருகத்தில் தூண் சிற்பமாகக் காட்சிதருகிறது. சிவபெருமானின் புஜங்கத்ராசிதக் கரணக் கோலமான இதில், இறைவனின் நான்கு கைகளிலுமே இசைக்கருவிகள் இல்லை. இதையடுத்துப் பல்லவர் பகுதியில் இராஜசிம்மரின் கற்றளிகளில்தான் இறையாடல் சிற்பங்கள் தோற்றம் தருகின்றன. சிவபெருமானின் குஞ்சிதம், ஊர்த்வஜாநு, தண்டபட்சம், அர்த்தசுவஸ்திகம் உள்ளிட்ட கரணங்களும் ஊர்த்வதாண்டவமும் மாமல்லபுரம் உலக்கணேசுவரத்திலும் காஞ்சிபுரம் இறவாதான், பிறவாதான், திரிபுராந்தக ஈசுவரங்கள், ஐராவதேசுவரம், மதங்கேசுவரம், கயிலாசநாதர் கோயில் ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளன. முக்தேசுவரத்திலும் இறையாடல் சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் பல சுதைப்பூச்சு ஏற்றிருந்தாலும் சில சிற்பங்கள் சுதை நீங்கிய நிலையில் எழில் காட்டுகின்றன.

சிவபெருமானின் இவ்வாடல் தோற்றங்கள் பெரும்பாலான வற்றில், அவரது வலக்கைகளுள் ஒன்றில், (பெரும்பாலும் வல மேற்கை) இடைசுருங்கிய பறை உள்ளது. தமருகத்துக்கான கயிற்றிலிணைத்த உருண்டையை அவற்றில் காணமுடியவில்லை எனினும், அவற்றின் சிறுத்த அளவும் இறைவன் அவற்றைப் பற்றியுள்ள பாங்கும் இதே காலக்கட்டத்தைச் சேர்ந்த செப்பு இறையாடல் திருமேனிகளின் கையில் உரிய வடிவமைப்பில் தமருகம் இருப்பதும் இத்தோலிசைக் கருவியைத் தமருகமாகக் கொள்ள உதவுகின்றன.

பரங்குன்றம், குன்றக்குடி ஆகிய முற்பாண்டியர் காலக் குடைவரைகளிலுள்ள சிவபெருமானின் ஆடற்சிற்பங்களிலும் அவர்தம் கற்றளியான திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் கபோதக்கூட்டிலுள்ள ஆனந்ததாண்டவச் சிற்பத்திலும் இறைவனின் வலமேற்கையில் உருண்டையற்ற இடைசுருங்கு பறையே உள்ளதெனினும், அவற்றையும் அளவு, பற்றியுள்ள பாங்கு கருதித் தமருகமாகவே கொள்ளலாம்.

திருஎறும்பியூர், சீனிவாசநல்லூர், திருப்பழனம், துடையூர், பாச்சில், புள்ளமங்கை, திருச்செந்துறை உள்ளிட்ட முற்சோழரின் தொடக்கக் கால இறையாடல் சிற்பங்களிலும் இந்நிலை தொடர்ந்தாலும் கண்டராதித்தர் காலம் தொட்டு மாற்றத்தைக் காணமுடிகிறது. கருந்திட்டைக்குடி, கீழப்பழுவூர், திருநறையூர், கூகூர், திருப்புறம்பியம், காமரசவல்லி, கங்கைகொண்டசோழபுரம், மானம்பாடி, திருச்செங்கட்டாங்குடி முதலிய கோயில்களிலுள்ள ஆடவல்லான்

சிற்பங்களில் வலமேற்கையில் அடிக்கும் உருண்டையுடன் தமருகம் கண்காட்டுகிறது.

செப்புத்திருமேனிகளில்

தமிழ்நாட்டிலுள்ள ஆடல்திருமேனிகளில் காலத்தால் முற்பட்டதாகக் கூரம் ஊர்த்வஜானு கரணரைக் குறிக்கலாம். பொருப்பு மேட்டுப்பட்டியில் கிடைத்ததாகச் சென்னை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கால்மாறி ஆடிய சிவத்திருமேனியைச் சிலர் முற்பாண்டியர் காலத்ததென்பர். இவ்விரண்டிலுமே சிவபெருமானின் கையில், அடிக்கும் உருண்டையுடன் தமருகம் இடம்பெற்றுள்ளது. கூரம் திருமேனி வலக்கையிலும் பாண்டியர் திருமேனி இடக்கையிலும் அதைக் கொண்டுள்ளன.

முற்சோழர் காலத்தில் வடிவமைக்கப்பட்ட வயலூர், கொடுமுடிச் சதுரதாண்டவர்கள், திருவரங்குளம் இலலிதகரணர், திருவக்கரை ஊர்த்வஜானு கரணர், நல்லூர், குழித்தலை, கிளக்காடு ஆடவல்லான் திருமேனிகளிலும் இறைவனின் வலமேற்கையில் தமருகம் கயிற்றில் பிணைத்த உருண்டையுடன் உள்ளது. சென்னை அருங்காட்சியகத்திலும் தமிழ்நாட்டின் பல்வேறு கோயில்களிலுமுள்ள சிவபெருமானின் ஆடல்திருமேனிகளிலும் தமருகமே தனிப்பெரும் இசைக்கருவியாய்க் கொள்ளப்பட்டுள்ளது. இவை நோக்க, பல்லவர், சமகாலப் பாண்டியர், முற்சோழரின் தொடக்கக் கால ஆடற்திருமேனிகள் கொண்டுள்ள இடைசுருங்கு பறையை அதன் அளவு, இறைக்கை அதைப் பற்றியிருக்கும் பாங்கு கொண்டும் தொடர்ந்து கிடைக்கும் சிற்ப, செப்புத்திருமேனிகளின் காட்சி கொண்டும் அடிக்கும் உருண்டையற்ற நிலையிலும் தமருகமாகக் கொள்வதே சரியெனத் தோன்றுகிறது.

பிற சிவத்தோற்றங்களில்

சிவபெருமான் ஆடும்போது கைக்கொள்ளும் இத்தமருகம் அவரது பைரவர், சேத்ரபாலர் வடிவங்களிலும் அரிதாக யானையை அழித்த கோலத்திலும் காணப்படுகிறது.***15*** உடுக்கையாகப் பெயர்மாற்றம் பெற்ற துடியை இறைவன் கையாலோ, கோலொன்றாலோ தட்டி முழக்குவதைக் கங்காளர் கோலங்களில்

காணமுடிகிறது. இக்கோல் வளைந்திருப்பின் குணில் என்றழைக்கப்படுகிறது. குணிலுடன் உடுக்கை வாசிக்கும் கங்காளரைச் சோழபுரம், காமரசவல்லி, குடந்தை நாகேசுவரர், திருச்செங்கட்டாங்குடி, திருவலஞ்சுழிக் கோயில்களில் பார்க்கலாம். அவர்களுள் காமரசவல்லியார் வலமேற்கையில் தமருகமும் பெற்றுள்ளார். உடுக்கையைக் கையால் முழக்கும் கங்காளர்களைச் சிறுபழுவூரிலும் திருவிசலூரிலும் காணமுடிகிறது. பழுவூர்க் கங்காளரின் வலமேற்கையில் தமருகமும் உள்ளது. பேரூர்ப் பட்டீசுவர ஊர்த்வதாண்டவர் இடக்கையில் உடுக்கை கொண்டு வலக்கைக் குணிலால் முழக்க, தில்லை நடராசர் கோயில் குளக்கரைத் தூணிலுள்ள ஊர்த்வதாண்டவர் தம் இடக்கைகளுள் ஒன்றிலுள்ள உடுக்கையை, மற்றோர் இடக்கையால் தட்டி முழக்கி அதிசயிக்க வைக்கிறார்.

கண்டியூர்க் கங்காளர் வலமேற்கையில் உடுக்கையை அதன் இடைநாடாவைப் பிடித்தபடி காட்சிதர, அண்ணாமலையார் கோயிலிலும் இறைவனை அதே பாங்கில் காணமுடிகிறது. தமருகம் எனில் அதன் இடையை இறை விரல்கள் பற்றியிருக்கும். முழக்காது கொண்டிருக்கும் உடுக்கை எனில் இறைக் கை அதன் நாடாவைப் பிடித்திருக்கும். கருவியைக் கைக்கொள்வதில் சிற்பிகள் காட்டியிருக்கும் இவ்வேறுபாடு, முழக்காத நிலையில் இறைவன் கைக்கொண்டிருப்பது உடுக்கையா தமருகமா என்றறிய, அதன் அளவு உதவுமாறு போலவே துணையாகிறது.

முடிவுரை

சங்க, காப்பியக் காலத்தில் பெருவழக்குப் பெற்றிருந்த துடி, பத்திமைக் காலத்தில் உடுக்கை என்றும் அழைக்கப்பெற்றுச் சோழர் காலத்தில் ஆடலுக்குகந்த இசைக்கருவியாகத் திகழ்ந்த துடன், சிவபெருமானின் சில கோலங்களிலும் இடம்பெற்றது. இடைசுருங்கு பறையான இதை ஒரு கையால் பற்றி மற்றொரு கையாலோ அல்லது கைக்கோலாலோ இயக்கினர். முழக்காத காலங்களில் இடைநாடாவைப் பற்றிய நிலையில் அவர்தம் கையில் அது இலங்கியது.

காரைக்காலம்மை காலத்தில் அறிமுகமான தமருகம், பத்திமைக் காலத்தில் இறைவன் ஆடும்போது கைக்கொள்ளும் இன்றியமையாத இசைக்கருவியாகி, அவரது ஆடல்தோற்றங்களில் தவறாது இடம்பெற்றது. பைரவர், சேத்ரபாலர்

முதலிய பிற சிவத்தோற்றங்களிலும் தமருகம் கொள்ளப்பட்டது. அளவில் சிறியதாகவும் விரல்களால் பற்றி இயக்கக்கூடியதாகவும் கருவியின் இடைப்பகுதியில் கட்டப்பட்டுள்ள கயிற்றுடன் இணைந்த உருண்டை, கருவியின் இரு முகங்களிலும் மோதி ஒலியெழுப்புவதாகவும் அமைந்த தமருகம், உடுக்கையினின்று அமைப்பிலும் பயன்பாட்டிலும் மாறுபட்டதாகும். துடியும் உடுக்கையும் இரு முகம் பெற்றிருந்தபோதும் அவற்றின் ஒரு முகமே இசைக்குப் பயன்பட்டது. ஆனால், தமருகம் இருமுகங்களிலும் உருண்டை மோத இசை தந்தது.

குறிப்புகள்

1. 'துடியிடையோயே', சிலம்பு 6: 26, 'துடியார் இடை உமையாள்', திருமுறை 6: 57: 8 , 'துடியார் இடையாள்', திருமுறை 1: 34: 3, 'துடி நடுவன்ன துளங்கிய நுசுப்பிற்' பெருங்கதை 2: 15: 66.

2. ஆர். ஆளவந்தார், தமிழர் தோற்கருவிகள், ப. 72.

3. 'கருங்கை சிவப்ப வலி துரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி', புறம் 170.

4. 'துடி எறியும் புலைய, எறிகோல் கொள்ளும் இழிசின', புறம் 287.

5. தொல். பொருள், புறத்திணை இயல், நூற்பா எண் 62.

6. மு. கு. நூல், ப. 72.

7. பரிபாடல், 21, 22.

8. மு. கு. நூல், ப. 73.

9. நாலடியார், 388.

10. நிரைகோடலில் துடியும் பறையும் தொடர்ந்து இடம்பெற்றமையை சீவகசிந்தாமணி உறுதிசெய்கிறது. பா. எண் 1147.

11. பிங்கல நிகண்டு, ப. 223.

12. ARE 1919: 14; ஆவணம் - 17 பக். 56, 57.

13. இரா. கலைக்கோவன், சோழர் கால ஆடற்கலை, பக். 248-252.

14. இரா. சிவானந்தம், காஞ்சிபுரம் மாவட்டத் தொல்லியல் கையேடு, ப. 185.

15. இத்தமருகம் காளியாலும் கைக்கொள்ளப்பட்டிருப்பதைப் பல சிற்பங்களில் காணமுடிகிறது. எ. கா. புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில் கண்டபாதச் சிற்பங்கள்.

இத்தாலிய மொழியில் திருக்குறள் கவிதைகள்

Bp Dr J இரவிக்குமார் ஸ்டீபன் G., நிறுவுநர், உலகிற்கு திருக்குறள் இயக்கம்



லத்தீன் மொழியில் வெளிவந்த திருக்குறள் மொழிமாற்ற வரலாறு, வரலாற்று மற்றும் அரசியல் மாற்றங்களோடு ஆழமாகப் பிணைந்துள்ளது. 1730-ஆம் ஆண்டில், *வீரமாமுனிவர்* (Fr Constantius Joseph Beschi) மேற்கொண்ட லத்தீன் மொழிமாற்றம், போர்த்துகீசிய ஆட்சியாளர்களின் நிருவாக முறையிலும் சிந்தனைப் போக்கிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, 1856-இல் *கார்ல் கிராவுல்* (Rev. Dr Karl Graul) தந்த லத்தீன் மொழிமாற்றம், இந்திய விடுதலை இயக்கத்தை அகிம்சைப் பாதையில் வழிகாட்டத் தேவையான தத்துவார்த்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது.



இந்த வளமான பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக, என்னால் இயற்றப்பட்ட கவிதை வடிவ லத்தீன் திருக்குறள் மொழிமாற்றம் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் (CICT) அதிகாரப்பூர்வ ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மொழிபெயர்ப்பு, ஜார்ஜியா பல்கலைக்கழகம் போன்ற முதன்மை ஆராய்ச்சி மையங்கள் முதல் புகழ்பெற்ற 'ஐவி லீக்' (Ivy League) பல்கலைக்கழகங்கள் வரை உலகளவில் உள்ள உயர்மட்ட நிறுவனங்களின் நவீன ஆய்வாளர்களையும் மாணவர்களையும் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அறிஞர் அண்ணா: அடிச்சுவட்டில்...

நூலகர் மு. பழநிச்சாமி, நாகமலைப் புதுக்கோட்டை, மதுரை. மின்னஞ்சல் : vmps834@gmail.com

ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின் வாராது வந்த மாமணியெனத் தமிழகம் தழைக்க விடிவெள்ளியாய்- விண்மீனாய் வந்துதித்த தவச் செல்வர்தான் அறிஞர் அண்ணா.



தமிழ் -தமிழன் என்ற உணர்வற்றுப் பொட்டுப் பூச்சியாய், புன்மைத் தேரையாய், கல்லாய், மரமாய், உயிரற்ற பிண்டமாய்க் கிடந்த தமிழகத்து மக்களைத் தன் சொக்கவைக்கும் பேச்சால் தட்டியெழுப்பிய சிம்புட் பறவை; செம்மாந்து நடைபயின்ற சிங்கம். அவர்தான் அறிஞர் அண்ணா. நெஞ்சினிக்க நாவினிக்க நினைவெல்லாம் சேர்ந்தினிக்கப் பேசும் 'நா-வேந்தர்' அவர். அவர் நாவசைய இந்த நாடே அசைந்தது; நாட்டின் ஆட்சியே அசைந்தது.

பேசிப்பேசித் தமிழுக்கு ஏற்றமூட்டிய வாய் அண்ணாவின் வாய். எழுதி எழுதித் தமிழுக்கு உரமூட்டிய கரம் அண்ணாவின் கரம். நாடகங்களால் நாட்டோரை விழிப்புறச் செய்தவர் அவர்.

திரைப்படங்களைக் கொண்டு திருப்புமுனை தந்த சீர்திருத்தச் செம்மல். தமிழுக்குப் புதுநடை தந்த புரவலர் அவர். சொல்லின் செல்வராகவும் சிந்தனைச் சிற்பியாகவும் சேர்ந்து வார்ப்படமானவர் தான் - அண்ணா.

முல்லை மலரில் மணமிருக்கும்; மூழ்கி எடுத்த முத்தில் அழகிருக்கும்; அண்ணாவின் தனியொரு வார்த்தையில் இவையனைத்தும் நிறைந்திருக்கும் .

பாம்பையும் பழக்கி வைத்தார்; பகைவரைச் சிரிக்க வைத்தார்; ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டார்; அவர்தான் அறிஞர் அண்ணா.

‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு’ என்னும் மணிவாசகத்தை மந்திர வாசகமாக்கித் தமிழ் மக்களுக்குப் பண்பாட்டுப் பெருமிதம் சொல்லித் தந்தவர் - அவர்.

கல்லடியா? கலங்காதே; சொல்லடியா? சோர்வுபடாதே; எதையும் தாங்கும் இதயம் வேண்டும்; இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் எனத் தன்னம்பிக்கையூட்டித் தம்பியரைத் தோள்தட்டி ஆர்ப்பரிக்கச் செய்தவர் அவர்.

அகிம்சை வழி நின்று அறம் பாடிப் பாடியே அரசியலுக்கு மெருகூட்டிய அறிஞரும் அவர்தான். கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை நாட்டு மக்களின் நெஞ்சங்களிலெல்லாம் நிலைபெறச் செய்தவர் அவர்

‘தம்பி’ - என்றொரு மந்திரச் சொல்லெடுத்து அதைச் சொல்லிச் சொல்லியே பாசு- பந்தப் பிணைப்பை வளர்த்தவர் - அவர்.

‘அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த’ என்றபடி தம்பியர் அனைவரும் சூழ்ந்து அண்ணாவை அரியாசனத்தில் அமர வைத்து அலங்கரித்துப் பார்த்தனர்; முதலமைச்சராக்கி முகம் மலர்ந்தனர்.

இந்த இமாலய உணர்வு கண்டும் ஆணவம் கொள்ளவில்லை; அகந்தை கொள்ளவில்லை- அண்ணா. மாறாகப் பணிவையும் இன் சொல்லையுமே அணிகலனாகக் கொண்டு அப்பணிக்குத் தன்னைத் தகுதிப் படுத்திக் கொண்டவர்- அவர்.

கனிந்த நெஞ்சோடும் கும்பிட்டு குவிந்த கரங்களோடும் சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட நெஞ்சோடும் நினைவோடும் அப்பொறுப்பை வகித்துப் புகழ்

கொண்ட பெருமகன் அவர். தமிழகத்து மக்கள் தாம் பிறந்த புண்ணிய பூமிக்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டினர். தமிழகத்தின் இந்த ஒட்டுமொத்த உணர்ச்சியின் வடிகாலாக சங்கரலிங்கனார் உண்ணா விரதமிருந்து உயிர் நீத்தார். அதன் பின்னரும் பாராக் கண்ணினாய்க் கேளாக் காதினராய் அசட்டை செய்தது- அன்றைய அரசு.

அண்ணா அரசுக் கட்டிலேறினார். நான்கு கோடித் தமிழர்களின் காதுகளிலும் இன்பத் தேன் வந்து பாயும் வண்ணம் தாய் நாட்டிற்குத் ''தமிழ்நாடு'' எனப் பெயர் சூட்டினார். தமிழர்களின் நெஞ்சங்களை யெல்லாம் குளிர வைத்தார். உலகே வியக்கும் வண்ணம் சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடத்தித் தமிழோசையைத் தரணி எங்கும் தவழவிட்டவர் -அவர்.

அண்ணாவிற்கு எந்த மொழியின் மீதும் காழ்ப்பில்லை; கசப்பில்லை; வெறுப்பில்லை. எனினும் பிற மொழியொன்று ஆதிக்க சக்தியாக மாறி நம் முதுகின் மேல் ஏறியமர்ந்து சவாரி செய்வதை அண்ணா ஏற்கவில்லை. எனவே இரு மொழிக் கொள்கைக்குச் சட்ட வடிவம் தந்தார்.

முதல்வராகப் பொறுப்பேற்ற பின் பிரிவினைப் போக்கைக் கைவிட்டுத் தேசிய நீரோட்டத்தில் இணைந்தவர்தான் அண்ணா.

சீனப் போரின் போதும் பாகிஸ்தான் போரின் போதும் இந்த நாட்டு மக்களை ஓரணியில் கொண்டுவந்து நிறுத்தி இந்திய ஒருமைப்பாட்டிற்கு உத்வேகம் ஊட்டியவர் -அவர்.

யாதும் ஊரே; யாவரும் கேளிர்; எனும் வாசகத்தை கொண்டு உலக நேய ஒருமைப்பாட்டிற்குக் குரல் கொடுத்தவர் -அண்ணா.

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' எனும் தொடரை எடுத்துக்காட்டி இணைந்து வாழும் பண்பைப் போதித்தார்.

வேற்றுமையில் ஒற்றுமை காண உழைத்தார்.

அவர் ஒரு எழுத்துலக வேந்தர் என்பதை அவரது 'தம்பிக்குக் கடிதம்' காட்டிற்று. திரையுலக மேதை என்பதை 'ஓர் இரவு'-ம், 'வேலைக்காரி' - யும், சொர்க்கவாசலும் மெய்ப்பித்தனன. நாடகாசிரியர் என்பதை 'நீதிதேவன் மயக்கம்' நிரூபித்தது. சீர்திருத்தவாதி என்பதை அவர் இயற்றிய சுயமரியாதைத் திருமணச் சட்டம்- காட்டியது. ஜனநாயகவாதி என்பதை 'மக்கள் குரலே மகேசன் குரல்' எனும் மந்திர வாசகம் காட்டிற்று. அனைத்திற்கும் மேலாக அவர் ஓர் 'மாமனிதர்' என்பதை அவரது மரண ஊர்வலம் காட்டிற்று.

இவ்வாறு தலைவர்களுக்கெல்லாம் தலைவராக, அறிஞர்களுக்கு இடையில் பேரறிஞராக, எழுத்துலகின் எழுஞாயிறாகச், சங்கத்தமிழ் முழங்கி வரும் தமிழருவியாக, இளைஞர்களின் இதயங்களை ஆளும் மன்னராக, அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாக வாழ்ந்து முடிந்த அண்ணாவின் புகழ் இந்த மண்ணும் விண்ணும் மறிகடலும் உள்ளவரை நின்று நிலைத்து வாழட்டும்; வளரட்டும்.

சங்ககாலத் தமிழர்களின் மரபணு – வரலாற்றைத் தேடும் புதிய ஆய்வு

அ. தீவ்யகுமாரி கண்ணம்மா DIAE, ஐயை உலக மகளிர் மன்றம்.

கீழடி–கொந்தகை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய தொல்லியல் தளங்களில் கிடைத்த மனித எச்சங்களின் DNA ஆய்வு புதிய தகவல்களை வெளிக்கொண்டு வருகிறது.

சங்ககாலத் தமிழகத்தின் வரலாற்றை அறிய இதுவரை தொல்லியல் பொருட்கள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் எனப் பல்வேறு ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது அவற்றுடன் பண்டைய DNA ஆய்வும் இணைந்துள்ளது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மரபியல் துறையில் செயல்படும் Ancient DNA ஆய்வகத்தில், தமிழகத்தின் பல்வேறு தொல்லியல் அகழாய்வுகளில் கிடைத்த மனித எச்சங்கள் உள்ளிட்ட உயிரியல் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வகத்தின் நோக்கமே பண்டைய DNA மற்றும் பிற உயிரியல் தரவுகளைப் பயன்படுத்தி தமிழகத்தின் தொன்மையான மக்கள்தொகை, வேளாண்மை, உணவுப் பழக்கம், விலங்குகள் மற்றும் தாவரங்களின் வரலாறு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை அறிவியல் ரீதியாக ஆராய்வதாகும்.

தற்போது வெளியாகியுள்ள தகவல்களின்படி, கீழடி தொல்லியல் தொகுதியுடன் தொடர்புடைய கொந்தகை புதைமேடு, ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை ஆகிய இடங்களில் இருந்து கிடைத்த மனித எச்சங்களின் DNA மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆய்வில், கொந்தகை மாதிரிகளில் இருந்து 75,000-க்கும் மேற்பட்ட மரபணுக் குறியீடுகள் (genetic markers) செயலாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், ஆதிச்சநல்லூர் மாதிரிகளில் சுமார் 9,000 markers-ம், சிவகளை மாதிரிகளில் சுமார் 6,000 markers-ம் பெறப்பட்டுள்ளதாக மதுரை காமராஜர் பல்கலைக்கழக மரபியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஜி. குமரேசன் தெரிவித்ததாக வெளியாகியுள்ள செய்திகளில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆரம்பகட்ட மரபணுத் தரவுகள், தென்னிந்தியர்கள், இலங்கை மக்கள் மற்றும் பரந்த தெற்காசிய மக்கள்தொகைகளுடன் மரபணு நெருக்கம் காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றன. இந்த முடிவுகள் உலகின் மிகப்பெரிய மனித மரபணு மாறுபாட்டுத் தரவுத்தொகுப்புகளில் ஒன்றான 1000 Genomes Project தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, இது இன்னும் முழுமையாக வெளியிடப்பட்ட இறுதி ஆய்வு முடிவு அல்ல என்பதுதான். ஆய்வுக் குழு மேலும் பல கட்ட பகுப்பாய்வுகளை மேற்கொண்ட பின்னரே முழுமையான தரவுத்தொகுப்பு வெளியிடப்படும் என்று கூறியுள்ளது. எனவே, தற்போதைய தகவல்களை ஆரம்பகட்ட ஆய்வு முடிவுகள் என்ற நிலையிலேயே அணுகுவது அறிவியல் ரீதியாகப் பொருத்தமானது.

2025ஆம் ஆண்டில் சுமார் 4,000 முதல் 5,000 குறியன்கள் (markers) வரை செயலாக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது கொந்தகை மாதிரிகளில் சுமார் 75,000 குறியன்கள் (markers) வரை பெறப்பட்டிருப்பது இந்த ஆய்வின் தொழில்நுட்ப முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

இந்தத் தரவுகள் வெளியானால், பண்டையத் தமிழகத்தில் வாழ்ந்த மக்களின் மரபணு அமைப்பு, அவர்களுக்கும் இன்றைய தென்னிந்திய மக்களுக்கும் இடையிலான மரபணுத் தொடர்புகள், மேலும் தெற்காசியாவின் பிற மக்கள்தொகைகளுடனான தொடர்புகள் பற்றிய கேள்விகளை ஆராய்வதற்கு உதவும் முக்கியத் தரவுகள் கிடைக்கக்கூடும்.

கீழடி மட்டுமல்ல; கொந்தகையும் முக்கியம்:

சங்ககாலத் தமிழகத்தைப் பற்றிய ஆய்வுகளில் கீழடி ஏற்கெனவே முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. கீழடி அகழாய்வுகளில் செங்கல் கட்டுமானங்கள், வடிகால் அமைப்புகள், தொழில்சார் செயல்பாடுகளுக்கான சான்றுகள் மற்றும் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள் உள்ளிட்ட பல்வேறு தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

ஆனால் கீழடிக்கு அருகிலுள்ள கொந்தகை புதைமேடு, அங்கு வாழ்ந்த மக்களின் மனித எச்சங்களை ஆய்வு செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இதன் காரணமாகவே கொந்தகை மாதிரிகளின் *DNA* ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பண்டைய மரபணுத் *(Ancient DNA)* திட்டம், கொந்தகை மட்டுமின்றி சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை உள்ளிட்ட பல தொல்லியல் தளங்களில் இருந்து கிடைத்த உயிரியல் மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்டது. உலகளாவிய மரபணுத் தரவுகளுடன் பண்டைய *DNA*-வை ஒப்பிட்டு, மக்கள்தொகை நகர்வு மற்றும் தொடர்புகளைப் புரிந்துகொள்வதும் இந்தத் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். தமிழர்கள் முக அமைப்பை மீட்டெடுக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

கொந்தகையில் கிடைத்த மனித எச்சங்கள் தொடர்பான ஆய்வுகள் *DNA*-வுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அங்குப் புதைக்கப்பட்டிருந்த பண்டைய மனிதர்களின் எலும்புக்கூடுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் முக அமைப்பை மறுகட்டமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால், ஒருபுறம் *DNA*, மறுபுறம் எலும்பியல் மற்றும் முக மறுகட்டமைப்பு என வெவ்வேறு அறிவியல் முறைகள் மூலம் பண்டைய தமிழக மக்களைப் புரிந்துகொள்ளும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

சங்ககால மக்களின் உணவு:

மரபணு ஆய்வுகளின் மற்றொரு முக்கியமான நோக்கம், அக்கால மக்களின் உணவு மற்றும் வேளாண்மையைப் புரிந்துகொள்வதாகும்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகளில் தொல்லியல் பொருட்களில் காணப்படும் புரதங்கள், கொழுப்புச் சத்துகள் மற்றும் பிற உயிர்வேதியியல் தடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக பண்டைய மண்பாண்டங்களில் கண்டறியப்பட்ட *cholesterol* சார்ந்த தடயங்கள், இறைச்சி உணவு உண்டதற்கான சான்றுகளாக ஆய்வுகளில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

பண்டையத் தமிழகத்தில் பல்வேறு வகையான நெல் மற்றும் திணை *(foxtail millet)* போன்ற சிறுதானியங்கள் பயன்படுத்தப்பட்டதையும் ஆய்வுகள் ஆராய்கின்றன.

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் பிற தொல்லியல் மாதிரிகளில் இருந்து கிடைக்கும் கரிம மூலக்கூறுகள் மூலம், அக்கால உணவுகளில் அரிசி, நெய், பருப்பு வகைகள், கீரைகள், பால், வெள்ளரிக்காய், நிலக்கடலை மற்றும் தேங்காய் போன்ற உணவுப் பொருட்கள் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்த அறிவியல் தரவுகள் தனியாகப் பார்க்கப்படுவதில்லை. அவை சங்க இலக்கியங்களில் காணப்படும் உணவு மற்றும் வாழ்வியல் குறிப்புகளுடனும் ஒப்பிடப்படுகின்றன.

குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு, பொருநராற்றுப்படை போன்ற இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகள், தொல்லியல் மற்றும் ஆய்வகத் தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

இதன் மூலம் இலக்கியத்தில் பதிவாகியுள்ள வாழ்வியல் தகவல்களையும், தொல்லியல் பொருட்களில் கிடைக்கும் அறிவியல் தடயங்களையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.

அடுத்த கட்டம் — முழுமையான ஆய்வு முடிவுகள்:

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மரபியல் துறை, பண்டைய தமிழகத்தின் மரபணு வரலாறு மட்டுமின்றி, வேளாண்மை, உணவுப் பழக்கம், நெசவு மற்றும் சங்ககால நாகரிகத்தின் பிற அம்சங்கள் தொடர்பாகவும் பல ஆய்வுகளைத் தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் ஒன்பது ஆய்வுக் கட்டுரைகள் தயாராகி வருவதாகவும், அவற்றை சர்வதேச உயர் *(peer-reviewed)* ஆய்விதழ்களில் வெளியிடுவதற்கான பணிகள் நடைபெறுகின்றன. இதனால், தற்போது வெளியாகியுள்ள *75,000*-க்கும் மேற்பட்ட மரபணுக் குறியீடுகள் குறித்த தகவல்களை ஓர் இறுதி முடிவாக அல்லாமல், விரிவான ஆய்வுக்கான தொடக்கத் தரவாகவே பார்க்க வேண்டும்.

ஆய்வுக் குழு முழுமையான தரவுகளை வெளியிட்டு, அவை சர்வதேச அறிவியல் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட *(peer review)* பின்பே இந்த மரபணுத் தொடர்புகளின் வரலாற்று முக்கியத்துவம் இன்னும் தெளிவாகப் புரியும். ஆனால் ஒரு விஷயம் மட்டும் இப்போதே

தெளிவாகிறது.

கீழடி, கொந்தகை, ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற இடங்களில் கிடைக்கும் சான்றுகள் இனி மண்ணுக்குள் கிடைத்த பொருட்களின் வரலாறாக மட்டும் இருக்கப்போவதில்லை. அந்த மண்ணில் வாழ்ந்த மனிதர்களின் DNA, உணவு, வேளாண்மை, தொழில் மற்றும் வாழ்வியல் ஆகியவற்றையும் அறிவியல் முறையில் வாசிப்பதற்கான புதிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

சங்ககாலத் தமிழகத்தின் வரலாற்றை இனி இலக்கியம் மட்டும் சொல்லப்போவதில்லை.

தொல்லியல் சொல்லும்.

வேதியியல் சொல்லும்.

உயிரியல் சொல்லும்.

அவற்றுடன், பண்டைய DNA-வும் சொல்லத் தொடங்கியுள்ளது.

இந்த ஆய்வுகளின் முழுமையான முடிவுகள் வெளியாகும் போது, பண்டைய தமிழக மக்களின் மரபணு வரலாறு குறித்து இன்னும் தெளிவான அறிவியல் படம் கிடைக்கக்கூடும்.

“பேச்சாகவா பேசினார் அண்ணா...”

முனைவர் சிவ இளங்கோ, புதுச்சேரி

இராஜாஜியைக் கவர்ந்த அண்ணா

1937 ஆம் ஆண்டு. சென்னை ஒய். எம். சி. ஏ. மண்டபத்தில் ஒரு விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு நடுவராக, சி. இராஜகோபால் ஆச்சாரி வீற்றிருந்தார் (இவர் அதே ஆண்டில் சென்னை மாகாணப் பிரதான அமைச்சர் ஆனார்). விவாதப் பொருளில் பலர் ஒட்டியும், வெட்டியும் பேசினார்கள். அந்த நேரம் ராஜாஜியிடம் ஒரு சீட்டு வந்து சேர்ந்தது. அதை அவர் பிரித்துப் படித்துக் கொண்டிருக்கும் போது, அருகில் இருந்த ஓர் அரசியல் தலைவர், எட்டிப் பார்த்து, “இந்த அண்ணாத்துரையைப் பேச அனுமதிக்காதீர்கள்” என்று ராஜாஜியிடம் கூறினார். அதற்கு, “யார் இந்த அண்ணாதுரை? இவருக்குப் பத்து நிமிடம் பேசக் கொடுத்தால் குடியா முழுகிப் போய்விடும்?” என்று கேட்ட ராஜாஜி, அண்ணாதுரையைப் பேச அழைத்தார்.

ஒல்லியான உருவத்துடன் முப்பது வயது நிரம்பாத வாலிப வயதினராக மேடை ஏறினார் அண்ணா. அவர் பேசவந்த பொருளில் மடை திறந்தாற் போல்

மிகச் சிறப்பாகப் பேசிவிட்டு இறங்கிப் போய் விட்டார். அந்த நிகழ்வுக்கு மறுநாள் ராஜாஜி சில காங்கிரஸ் தலைவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, "நேற்று அண்ணாதுரை என்ற ஓர் இளைஞர் பேசினார். பேச்சாகவா பேசினார்! நெருப்பையல்லவா அள்ளிக் கொட்டினார். ஆனால் அற்புதமாகப் பேசினார். நீங்களும் தான் பேசுகிறீர்களே....?.. என்று கூறினார். அண்ணாவை அன்று யார் என்று கேட்டவர்கள் எல்லோருமே பிற்காலத்தில் அவருடைய பேச்சுக்கு இரசிகராகிப் போனார்கள் என்பது வரலாறு. ராஜாஜியும் தன் அரசியல் பயணத்தில், 1960 களில், அண்ணாவிடம் வந்து அடைக்கலமானார்.

பெரியாரைக் கவர்ந்த அண்ணா

திருப்பூரில், 1935 ஆம் ஆண்டு நடைபெற்ற செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் தான் பெரியார் - அண்ணா சந்திப்பு நிகழ்ந்தது. அந்தச் சந்திப்புதான் அண்ணாவின் வாழ்க்கையில் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. அன்று முதல் பெரியார் அண்ணாவின் அரசியல் குருவானார்; தந்தையானார்; தலைவரானார். அண்ணாவின் அரசியல் பயணம் பெரியாருடனேயே தொடர்ந்தது.

1944 ஆம் ஆண்டில், சேலம் மாநாட்டில் நீதிக்கட்சி, 'அண்ணாதுரை தீர்மானம்' வழி, திராவிடர் கழகமாக உருவெடுத்தது. திராவிட நாடு வேண்டி அல்லது போராடிப் பெறுவது என்று திராவிடர் கழகத்தின் கொள்கையாகத் தீர்மானிக்கப் பட்டிருந்தது. திராவிடர் கழகத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காகப் பல்வேறு மாநாடுகள், கூட்டங்கள் நடந்து கொண்டிருந்த காலம். திருச்சியில், அப்படி ஒரு மாநாடு பெரியார் தலைமையில் நடைபெற்றது. திருச்சி, தென்னூர் முதல் தடவையாகக் கொடுத்து வைத்திருந்தது. அந்த மாநாட்டில் அண்ணா திராவிட நாடு பிரிவினை குறித்து விளக்கமாகவும், உலக அரசியலோடு திராவிட நாட்டைத் தொடர்பு படுத்தியும், தெளிவு படுத்தியும் பேசினார்.

"இந்தியா என்பது ஒரு கண்டம். எனவே, அது பல நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். ஐரோப்பாக் கண்டத்தில் 32 தனித்தனி நாடுகள் இருக்கின்றன. இருந்தும், ஐரோப்பா முழுவதும் ஒரே குடையின் கீழ் இருக்க வேண்டும் என்று யாரும் இதுவரை கூறவில்லை. அது போலவே இந்தியாவும் ஒரே குடையின் கீழ் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை" என்று பேசினார்.

இதற்கு முன்பாகப் பெரியார் கலந்து கொண்ட எத்தனையோ கூட்டங்கள், மாநாடுகளில் அண்ணா பேசியிருந்தும், தென்னூரில் அன்று அண்ணா பேசிய அரிய பேச்சாற்றலைக் கண்டு அசந்து போனார் பெரியார். பிற்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்து, அதன் நிறுவனராக அண்ணா இருந்தபோது, அன்றைய ஒன்றிய (காங்கிரஸ்) அரசாங்கத்தின் கெடுபடியால், திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைக் கைவிட நேர்ந்தது. ஆனாலும், "பிரிவினைக் கொள்கையைத் தான் கைவிட்டு இருக்கிறோம். ஆனால், அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன" என்று அனைவரையும் சமாதானப் படுத்தும் விதத்தில் மிகச் சாதுரியமாகப் பதில் அளித்தார் அண்ணா.

ஜின்னா பாராட்டிய அண்ணா

அண்ணாவின் ஆழ்ந்த வாசிப்பும், அவர் பெரியாருடன் மேற்கொண்ட பயணங்களும் அண்ணாவின் அரசியல் சிந்தனைகளை மெருகேற்றிக் கொண்டே வந்தன. அதில் முக்கியமானவை பெரியாருடன், அண்ணா மேற்கொண்ட வட இந்தியப் பயணங்கள் ஆகும். 1940 ஆம் ஆண்டு, ஜனவரி 5 ஆம் நாள் முதல் பயணம் தொடங்கியது. பெரியாருடன் அன்றைய பம்பாய் சென்றடைந்தனர் அண்ணாவும் பிற தோழர்களும் (ஜஸ்டிஸ் இதழ் ஆசிரியர் டி.ஏ.வி. நாதன், சண்டே அப்சர்வர் ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம், காஞ்சிபுரம் பார்ப்பனரல்லாதார் இளைஞர் கழகத் தலைவர் டி. பி. எஸ். பொன்னப்பன், கே. எம். பாலசுப்பிரமணியன் ஆகியோர்).

பெரியார் குழுவினர் பம்பாயில் தங்கியிருந்த ஒரு வார காலமும் டாக்டர் அம்பேத்கரின் அரவணைப்பிலேயே நன்கு கவனிக்கப்பட்டனர். ஒவ்வொரு நாளும் தேநீர் விருந்து, உணவு விருந்தளித்து, அம்பேத்கர் அங்கு பம்பாயில் பத்திரிகையாளர் சந்திப்புக்கும், ஜனாப் ஜின்னா மற்றும் பல முக்கியப் பிரமுகர்களின் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்து தந்தார்.

தாராவி, காலேகில்லா போன்ற தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஏற்பாடு செய்திருந்த ஆதி திராவிடர் வாலிபர் கழகத்தின் ஆண்டு விழாவிலும், பிற கூட்டங்களிலும் பெரியாரும், அண்ணாவும் கலந்து கொண்டு பேசினர். இதில் பல கூட்டங்களில் அண்ணல் அம்பேத்கர் தலைமை தாங்கி உரையாற்றினார். அம்பேத்கரின் ஆங்கிலப் பேச்சை அங்கு தமிழில் மொழி பெயர்த்தார் அண்ணா. அம்பேத்கர் இல்லத்திலும், முகமது அலி ஜின்னா இல்லத்திலும் பெரியாருடன் நடந்த சந்திப்புகளில் அம் மூவருக்கும் இடையே மொழிபெயர்ப்பாளர் ஆகவும் கலந்து கொண்டார் அண்ணா (இது பற்றி விரிவான செய்திகள் விடுதலை இதழ்களில் வெளிவந்தன - விடுதலை, சனவரி, 4 -18, 1940).

மேற்குறித்த பேச்சு வார்த்தைகளின் போது, அண்ணாவின் ஆங்கில மொழித் திறமையைக் கண்டு கொண்ட ஜின்னா, வியப்பு மிகக் கொண்டு அண்ணாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். அவரது பரந்த முகம், அகன்ற நெற்றி, செழித்த புருவம், விசாலமான விழிகள், அவைகளில் ஊடுருவி நின்ற ஆற்றல், ஒளி எல்லாம் சேர்ந்து ஜின்னாவுக்குப் பிரமிப்பை ஊட்டியிட்டிருக்க வேண்டும். பேச்சுவார்த்தை முடிந்து, தந்தை பெரியாரிடம் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, ஜின்னா அவர்கள், அண்ணாவைப் பற்றி வினவினார், "இந்த இளைஞன் யாரென்று". "நம்ம பையன் தான்" என்றார் பெரியார்.

"இந்த இளைஞன் சாதாரணமானவனாகத் தோன்றவில்லை. இவனுடைய அகன்ற விழிகள் என்னென்னவோ சொல்ல வைக்கின்றன. அவை ஆசியாக் கண்டத்தையே ஆட்டிப்படைக்கும் ஆற்றல் கொண்டவை என்று எனக்குத் தோன்றுகிறது. இப்படிப்பட்டவனை நீங்கள் எப்படி உங்களுடன் வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்?" என்று வியப்போடு கேட்டார் ஜின்னா.

"நீங்க சொல்றதெல்லாம் உண்மை தானுங்க. பையன் ரொம்ப கெட்டிக்காரனுங்க. ஆனா ரொம்ப அடக்கமானவனுங்க. நமக்குப் புள்ளை

மாதிரிங்க" என்று பெரியார் தெரிவித்த கருத்தையும் அண்ணாதான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்ல வேண்டியிருந்தது.

அந்த முதல் சந்திப்பிலேயே அண்ணாவைப் பற்றிய ஜின்னாவின் மதிப்பீடு சரியாகவே இருந்தது. இப்படிப்பட்ட ஒருவரைத் தனது மகனாகப் பெரியார் கருதியது சாதாரண வரலாறு இல்லை. பெரியாரும், அண்ணாவும் தலைவர் - தொண்டர் நிலையைக் கடந்து ஜின்னாவுக்கு முன் தந்தையும் மகனுமாகவே ஆனார்கள்.

மாணவர்களைக் கவர்ந்த அண்ணா

1940. மாணவர் உலகம், திராவிட நாடு, குடி அரசு ஏடுகளை எழுச்சியோடு விரும்பிப் படித்துக் கொண்டிருந்த காலம். முதலாம் இந்தித் திணிப்பு எதிர்ப்பு இயக்கக் காலத்தில் (1938-1940) அண்ணாவின் பேச்சும், குடியரசு, விடுதலை இதழ்களில் அவரது எழுத்தும் ஓர் எழுச்சி நாயகனாக அவரை அன்றைய சென்னை மாகாண இளைஞர்களுக்கு அடையாளம் காட்டின. மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடந்தவர்கள் கூட முற்றாக வெளிவந்து அண்ணாவின் முழக்கத்தைக் கேட்டனர். அண்ணாவின் கூட்டம் என்றால் இளைஞர்கள் எங்கிருந்தாலும் தேடிப்போகும் அளவிற்கு அண்ணா வசீகரமானார். அண்ணாவின் ஆற்றொழுக்கான பேச்சு ஓர் அற்புதம். பேச்சுக் கலையின் உன்னதம் எதுவோ அதுதான் அண்ணா. கேட்டவர்கள் மெய் மறந்தனர். தொடர்ந்து கேட்டோர் இமைக்கவும் மறந்தனர். மகுடிக்கு நாகம் மயங்கிடுமோ இல்லையோ, அந்தப் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக அண்ணாவும், அரங்கத்தினரும் மாறி விடுவார்கள்.

1942 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணாவை வரவழைத்துப் பேச வைக்க மாணவர்கள் ஆர்வமுற்றனர். ஆனால் அதற்கு எதிர்ப்பும் இருந்தது. அப்போது திராவிடர் இயக்கம், அரசியலில் மட்டுமின்றிப் புராண, இதிகாசக் கருத்துகளையும் எதிர்த்துத் தீவிரப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த காலம். பல்கலைக்கழகத்தில் அண்ணா பேச நேர்ந்தால், பழமையில் ஊறிப்போன பண்டிதர்களின் மனம் புண்படுமே என்று அப்பொழுது பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த சர் கே. வி. ரெட்டி அஞ்சினார். எனவே மாணவர்களின் வேண்டுகோளை மறுத்தார். பிற்காலத்தில் திமுகவில் தலைவர்களாக இருந்த நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருந்தனர். அவர்கள் மாணவர்களைத் திரட்டித் தொடர் முயற்சிகள்

மேற்கொண்டதன் விளைவாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அண்ணா அழைக்கப்பட்டு, மாணவர்கள் மத்தியில், 'இளம் உள்ளம்' என்ற தலைப்பில் பேசினார்.

அண்ணா, தனக்குக் கொடுத்த, 'இளம் உள்ளம்' என்ற தலைப்பை விட்டு விலகாமல், இளைஞர்களின் கனவை நனவாக்கும் வகையில் மிகச் சிறப்பாகப் பேசினார். அதுவரை அவரது எழுத்துக்களிலே கண்டறிந்த சொல்லழகையும், கருத்துச் செறிவையும், சொற்பொழிவாக நேரில் செவியாறக் கேட்ட மாணவர்கள் புளகாங்கிதம் அடைந்தனர். அதேநேரம், பண்டிதர்கள் அண்ணாவின் பேச்சைக் கேட்டு ஏமாந்து தான் போனார்கள். ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்து இருந்தமைக்கு மாறாக அண்ணா, புராண, இதிகாசங்களைக் குறிப்பிடும்போது நயமான சொற்களால் எவருடைய மனமும் புண்படாத விதத்தில் பேசினார். பொதுக்கூட்டங்களில் ஆரிய, வைதிகக் கருத்துகளைக் கடுமையாக விமர்சனம் செய்து பேசிய அவரா இவர்? இத்தனை அருமையாகப் பொருள் நயத்தோடும், நாகரிகத்தோடும் பேசுகிறாரே என்று கல்லூரிப் பேராசிரியர்களும், பண்டிதர்களும் வியந்தனர்.

இப்படித்தான் அண்ணாவின் கருத்துகளிலே இருந்த உவமைக்கும், செறிவுக்கும் பண்டிதரும் மயங்கினார்கள். மக்களோ உறங்கும் வேளையில் கூட விழித்திருந்து பேச்சைக் கேட்டபின், உறங்கிக் கிடந்த உள்ளத்தை விழிக்க வைத்தார்கள். அண்ணாவின் நாவன்மை நானிலத்தையே அசைத்தது. உயரம் குறைந்தவரான அண்ணா, கூட்ட முடிவில் தனது பேச்சாற்றல் மூலமாகப் பேருருவாகக் காட்சியளித்து, 'மீண்டும் வருகிறேன்' என்று சொல்லி விட்டுப் போனார். அதன்படியே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர் இடையில் பலமுறை அவர் பேச அழைக்கப்பட்டார். ஒருமுறை "The world old and new" என்ற தலைப்பில் அண்ணா ஆங்கிலத்தில் உரையாற்றினார். அண்ணாவிடம் கருத்து வேற்றுமை கொண்டிருந்த பேராசிரியர்கள், பண்டிதர்கள் கூட அவரது பேச்சாற்றலைக் கண்டு வியந்து இவர் எப்பொருளிலும், எந்தச் சூழ்நிலையிலும் ஆற்றொழுக்காகப் பேசக்கூடியவர் என்று வியந்தனர்.

மக்களின் மனதில் அண்ணா

1930 களில் நீதிக்கட்சியின் இளம் தலைவர்களின் ஒருவராக இருந்த அண்ணா, அக்கட்சியின் முக்கியத் தலைவர்களின் ஆங்கில மேடைப் பேச்சுகளைத் தமிழில் மொழி பெயர்த்துப் பேசினார். அவரும் பல தலைப்புகளில் உரையாற்றி வந்தார். 1937 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவரம்

அடைந்தபோது, கட்டாய இந்தியை எதிர்த்துச் சிறை சென்று நான்கு மாதத் தண்டனை முடிந்து விடுதலை பெற்ற பின் சென்னையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் அண்ணா பேசினார். அந்தக் கூட்டத்தில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தைத் தந்தை பெரியார் முன் வைத்தார். அந்த தலைப்பிலேயே அண்ணா உலக வரலாற்றில் மொழிப்போர்கள் குறித்து உரையாற்றினார். சென்னை மெரினா கடற்கரையில் நடந்த கூட்டத்தில் கடல் அலைகளின் ஆர்ப்பாட்டத்தோடு அண்ணாவின் சொற்பொழிவும் சேர்ந்து மக்கள் மனதில் எதிரொலித்தது. அவரது பேச்சழகும், சொல்லழகும் மகுடியின் நாதமென மக்களை மயக்கியது. கூட்டத்திலிருந்து யாரும் கலையாமல் அண்ணாவின் பேச்சில் மெய்மறந்து மணிக்கணக்காக நின்று கேட்டார்கள்.

ஆயிரக் கணக்கிலான மக்கள், ''யார் இவர்? இத்தனை அருமையாகப் பேசுகிறார்?'' என்று நெஞ்சம் நிறைந்து அன்று சொன்னார்கள். பிற்காலத்தில் மக்களின் மனம் கவர்ந்த முதலமைச்சராகவும் ஆன அண்ணா, அதே மெரினாக் கடற்கரையில் பல கூட்டங்களில் சொற்பொழிவு ஆற்றினார். கடற்கரையில் சீரணி அரங்கத்தை அமைத்தார். காலங்கள் உருண்டோடின. 1969 ஆம் ஆண்டில் அண்ணா காலமான போது, அதே கடற்கரையில், இலட்சக்கணக்கில் நிறைந்திருந்த மக்கள் எழுப்பிய 'அண்ணா', 'அண்ணா' என்ற அந்தச் சோக முழக்கம், கடல் அலைகளின் முழக்கத்தை விடவும் ஓங்கி ஒலித்த அந்த ஆரவாரத்தையும் கேட்டுத் தமிழ்த்தாயின் தவப் புதல்வனை இழந்த சோகத்தில், மக்கள் அனைவரும் கண்ணீருடன் கலைந்து சென்றனர்.

ஒரு தனிமனிதனாக, தனது அறிவுத் திறமையால், நாவன்மையால், கடமையால், கண்ணியத்தால், கட்டுப்பாட்டால் இந்த நானிலத்தை ஒற்றுமையாக்கி, ஒன்றுபடச் செய்து, தமிழ், தமிழ்நாடு என்ற ஒரே சிந்தனையின் மூலம் இணைய முடியும் என்ற யாரும், இனியும் செய்ய இயலாத காரியத்தைச் செய்து காட்டி, அங்கே மண்ணுக்கும், விண்ணுக்குமாகப் பேருருக் கொண்டு நின்றிருந்தார் பேரறிஞர் அண்ணா.

தரவுகள்:

1.தினமணி கதிர், அண்ணா நினைவுச் சிறப்பிதழ், 1969.

2.வடநாட்டில் பெரியார் - ஒரு சுற்றுப்பயணத் தொகுப்பு (தொகுதி 1), 2012, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு.

3.Siva Ilango - முகநூல் பதிவுகள்

Valluvar's guide to mindfulness

Dr. C. Rajeswari

Development of young men is in their hands especially in their mindfulness. In each and every activity mindfulness works by taking one's focus to the present moment and away from other things. Concentration and commitment are enriched by mindfulness. Mindfulness is a type of meditation that helps you with better memory, brainy, shrewd, active, decisive, meticulous and philanthropic living with positive vibes.

There are three components in mindfulness namely

1.intention - choosing to cultivate one's awareness
2.attention - to the present moment, sensation and thoughts
3.attitude - being kind, curious and non judgemental.

Mindfulness practices, reduces anxiety and hostility among urban youth and leads to reduced stress and builds strong relationships. The major benefit of mindfulness is it encourages one to pay attention to one's thoughts, actions and body. In short, mindfulness helps to concentrate completely on one's work, at a time and focus fully on it for perfection and attain a grand success. Mindfulness reduces anxiety and depression in the multitasking youth of present era

1 Intention

The first quality of mindfulness is intention. This is choosing to cultivate one's awareness. Valluvar helps the youth to feel it when they realize their ignorance. Any man, young or old, has to learn new things from everyday's life and experience.. Valluvar teaches this lesson in the third division called Love / Happiness.



As learning progresses, past ignorance is realized
So it is my love with this bedecked girl
As I get to know her

more (1122)

When a person learns something new in his life he is reminded of his new awareness at present, and the ignorance of the past. Intention is choosing to cultivate one's awareness. Learning is the only process to cultivate awareness and wipe off ignorance. When a youth gets to know his partner more and more his ignorance about her is removed and awareness blooms. Valluvar has taught the youth to realize intention in their own way of knowing a woman deeply and learning mindfulness vividly..

2.Attention

Attention is the second element in mindfulness. It is being attentive to the present moment, sensation and thought. Valluvar has explained this attention in his couplet defining friendship.



Thiruvalluvar who composed 1130 couplets in 3 major divisions virtue, wealth and happiness acts as a friend, guide and philosopher to the youth. His couplets help the present youth to seek good friends and maintain good relationships with them. A friend in need is a friend indeed. This term 'need' is explained by Valluvar with an instance.

Like the hand that moves reflexively when the dress slips,
A friend reacts swiftly to remove a woe (788)

This is a good quality of a friend. In the example mentioned by Valluvar, that dress did not ask any help from the hand, it didn't cry or scream for help, so without anyone requesting your help one should move forward to help others in need. This is considered to be a great human quality. Every youth must have such friends and every youth should prove himself to be such a great friend. Attention helps him to gain this true friendship and be a good friend.

Attention is defined as acting to the present moment, sensation and thoughts. It is nothing but the quick response of the hand that quickly moves to drape the slipping clothes and keeps up the modesty of the suffering person. This immediate reflexive action is called attention, to the present moment. If a young man follows Valluvar writings he will be attentive and do things mindfully.

3..Attitude

Attitude is being kind to others, curious and non judgemental. So young men need not judge a person as a good or bad, friend or enemy. He must be good to all irrespective of their behaviour with others.



Valluvar's composition helps the global youth irrespective of caste, creed and colour. He has composed Thirukkural for everyone to lead a life of virtue and selflessness. Thiruvalluvar says in his 578th coupler.

This world belongs to those who do their duty with no fault and are compassionate. He has the right to live in this world. One should perform his duty in a perfect manner and also be kind to others. Humane activities gain more minds and more love from people. If a young man or woman starts doing good things for society and is happy with what they have, they are considered to be righteous and rightful to live on this earth.

Conclusion

If a youth practices intention, attention and attitude in his life he is fit to enjoy mindfulness and free from anxiety and stress. He is sure to earn the benefits of mindfulness, live a wholesome life and be a better human than others to hus hus family, friends and society.

TAMILMAGAN's
Gene Notes in Vengai Anchor

Dr.C.Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, publisher, Madurai

CHAPTER 17

2038, Mumbai

AGCD are the four letters that show the magic of genes. Adenine, Guanine, Cytosine, and Thiamine. In the chemical structure of these four, we enjoy a good number of kaleidoscope images. Gene ladders do a lot of jimmicks in the chromosomes. The test done with John Keiser's blood sample showed an amazing fact. Dr. Maran and Renauld together asked for a third opinion from Dr. Jawahar. Jawahar carefully worked on it. The blood sample of Dev was also attached.

தமிழ்மகன்

'Dev has a problem with peculiar dreams and in his conscious stage he gets into the memories of two persons'. This line was underlined in the report. The memories of the two men who attack Dev are from different backgrounds



and different periods. Two men were affected like this so far, One is an American and the other one is Dev, a long-time immigrant from Tamil Nadu now in Malaysia. One day, both get caught in Tamil madness and the memories belonged to 2017 and 2037. Jawahar was keen in his observation of the reports and the condition of the patient. He is in the US for four generations. He got a spark of returning to his motherland and reached the Mumbai airport.

Jawahar and his team in Mumbai analyzed Dev's reports and decided that language affinity is also a disease. With that diagnosis, he wanted to do some research on this disease factor. He believed this particular gene was related to fear and anxiety. The Tamil race has been fighting to protect their language for centuries, so this genetic trait is embedded in them. There is evidence that the language belongs many centuries back. Two thousand years back, their land was engulfed by the sea waters. A linguistic race caught in a disease of language affinity is strange. One among a hundred is affected by language disease. For people like John Keiser and Dev, this disease has become severe.

Nowhere in this world do people name their kids in the name of their language as Tamilselvi, Tamilarasi, Tamilpavai, Tamilkodi, Tamilkodi, etc. Is any linguistic race in this world mad after their language?

Jawahar collected some quotations from Tamil poems that show the importance of their language. They were, ''Tamil is equal to my life, I don't know any other language as sweet as Tamil, If you hurt Tamils you'll be destroyed.'' Jawahar thought, are there any

ways and means to abolish diabetes and this language disease from the Tamils?

Not only the fear of the language but boldness and bravery were also in their genes. He felt that the language of Tamil is a sign of valor. Genetically, the fear of language being destroyed and the fighting spirit to protect it are intertwined. These both are the base of Tamil's genetics. Jawahar was confused by the contradictory factor of the fighting spirit and fear of Tamil. 'Only my language is the best one, and it is my life, soul and spirit' is the belief of the Tamils. Why these people are like this? Hunger and sex are instincts of the brain. But how can fascism be a basic instinct? Hitler believed that his race was created by God to rule the entire world. He had pride over his race, the Jews. These Tamils are also of the same kind. Why? He couldn't get an answer for this.

Jawahar suddenly felt a flash of light. It is right that he had fixed the linguistic traits as fear and anxiety, but these traits are not concerned about the state language Tamil, it is about the first language of human beings. Many things from the beginning of the human race are embedded in the human brain and one among them is his primitive language. Since Tamils are still in touch with that first language, they could experience fear and anxiety and express themselves. Others could not. Tamil is still closely related to the primitive language of the human race, the first language; proto-language; the root of the expression. Similar to food and sex–a root cause that helped to communicate the needs and wants of the human race for centuries and build up a unique culture and heritage.

Jawahar is a Bengali. He knew Tamil as an ancient language, but now he wanted to know more about that language. He got the list of the number of foreigners who had spent their lives in serving Tamil. This created a deep interest in him to do some research on Tamil.

The Journal on Genes posted Dev's article as a challenge in the field of genetics. Many scholars are invited to take part in a seminar regarding Dev's ailment. The seminar was hosted by Jawahar in the hospital in Mumbai. Jawahar presented his views. 'The first sounds made by men in the primitive age are registered in his brain. The multiplication of sounds developed the pragmatics in his brain. The meaningful sounds called language after centuries, helped primitive men to express their emotions, communicate with each other, and enjoy an elated feeling than other living beings. So he wanted to protect that

language.

The discussions started.

Do you think that is the ancestral language of the human race?

No doubt.

Could you please explain?

Tamil is found in the essential words of almost all languages to prove that they have a common ancestor. Look, there is an island called the Easter Isles. Traces of Tamil are identified in the language of the sons of the soil. In Japan, during the harvest festival, they cheer up by saying Hongaroe hongar resembling Pongalo pongalo in Tamil. In Mayan culture, we can find Tamil. In the European and African languages, we find Tamil in their basic words. From Nager koyil south to Nagaland in the northeast and Nagpur at its center Tamil traces are found in all languages. In Pakistan, more than 100 city and village names are related to Tamil names. Tamil place names are found in Iran, Iraq, and Afghanistan too.

So research about the human race should start from the southern tip of Tamil Nadu and Tamil as its first language. Tamils are fighting to preserve the glory of their language amidst racial disputes and conspiracies and natural disasters like deluges and drought. All kingdoms stopped their journey of power trap at the tip of Tamil Nadu whereas Tamils moved to different parts of the world and spread their language and culture.



How do you say that?

You know that many drastic changes and developments in history were by the Tamils and happened in

the 19th and 20th centuries. In this period Tamils had migrated to work in the fields of sugar cane in Malaysia, to make rails in Myanmar [Rangoon], To develop tea estates in Sri Lanka [Ceylon], To cultivate lands and create farms in Africa, to elevate real estate business in Canada, to emancipate Software technology in the United States and so on. Migration of Tamil includes the global widespread of Tamil and its culture.

Haa, haa, in Tamilnadu, the situation turns upside down. Laborers from other states like Bihar, Orissa, Jharkhand, and Tripura come to work in Tamilnadu.

Tell these people from other states had an opportunity to learn the language and customs of the Tamil community.

You said that all kingdoms stopped the expansion of Tamil Nadu. But British colonialism had a strong footing and relished its power in Tamil Nadu. How?

After the arrival of the British, the Tamils had an opportunity to know their past glory through the excavations that took place in Indus Valley and places like Athichanallur, Kudiyam, Achirupaakkam, Athirappaakkam, etc in TamilNadu. Pastors like Ellis, and Caldwell had no linguistic affinity, so their approach was treated as scientific and arguments logical. They translated many texts from Tamil to European languages. Caldwell tried to establish Tamil as the language created by God for early man.

Now the neurologists and genetic engineers kept silent.

Jawahar continued to say, the genes of the early men responsible for the language are still active in Tamils. In others, this gene has become dormant. So this health issue has to be approached as a genetic issue of early men.

The affinity towards Tamil is not madness but a duty to keep the lamp of interest burning. 'If there is no language we may perish', was the ancient belief and fear among the primitive society. So that fear exists in every Tamil man and he fights for the survival of his race by cherishing his language. Activities related to Tamil include the early fear and early anxiety or bravery of the human race.

மங்கல அணி

ஜனக்புரி சீனிவாசன், மேனாள் பள்ளித் தலைமையாசிரியர், டில்லி

ஒரு பெண் திருமணமானவள் என்பதற்கு அடையாளமே அவளுக்கு அணிவிக்கப்படும் தாலியும் மெட்டியுமே!

சங்க இலக்கியங்களில் தாலி, நாண், புதுநாண், வேலம்பழ வடிவம், வேழி, கடிகை நூல் என்னும் பெயர்களில் வழங்கப் பட்டுள்ளதை திருமணம் பற்றிய பாடல்கள் மூலம் தெளியலாம்.

பழங்காலத்தில் பனை ஓலையினாலும் (தாலம்) நாணற்புல்லைக் (கோரைப்புற்களை) கயிறாகத் திரித்தும் அணியும் வழக்கம் இருந்தது. புதுநாண் என்றனர்.

புறநானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் வேப்பம்பழ வடிவில் தாலி அமைத்துக் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அதனால் தாலியை வேப்பம்பழ வடிவம் என்றும் கூறினர்.

கடிகை நூல் என்றும் தாலியைக் குறிப்பிட்டனர். முத்து, பவழம், மலர்கள் முதலியவற்றைக் கோர்க்கப் பயன்படுத்திய ஒருவகை நூலைக் கடிகை நூல் என்பர். கடிகை என்பதற்குக் கோர்வை என்றும் பொருள் கூறுவர். நூலால் கோர்க்கப்பட்டுத் தாலி அணியும் வழக்கம் இருந்தமையை அறியலாம்.

திருமணச்சடங்கு முக்கியப் பொருளாக இருந்த தாலி எப்போதும் கழட்டப்படாமல் அணியும் அணிகலனாக இருந்தது. குழந்தைகளுக்குக் கூட ஐம்படைத்தாலி அணிவித்தனர். பெண் குழந்தைகளின் பிறப்புறுப்பை மறைக்கும் படியாக ஆலிலை வடிவத்தில் கட்டும் வழக்கம் இன்றும் தமிழர்களிடையே பழக்கத்தில் இருப்பதைக் காணலாம்.

பிறப்புறுப்பை மறைக்கும்படியான உடைகளை அணியும் குறிப்பிட்ட வயது வந்தவுடன் கழுத்திற்குக் கீழே மறைப்பதற்கு வேண்டிய முழுநாண் எனப்படும் தாலி கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அச்சுத்தாலி, ஆமைத்தாலி என்னும் பெயர்கள் வழங்கப்படுவதை உணரலாம்.

அதே நிலையில் திருமண வயது வந்ததும் பெண்வீட்டார் எவ்வளவு சொத்து உடையவராக இருந்தாலும் மணமகன் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும் வழக்கம் பண்டைக்காலம் முதலே தமிழ்ப் பண்பாடாக இருந்து வருகிறது.

பெண்ணின் உடலை மறைத்து பெண்ணைக் காப்பது கணவன் கடமை என்பதன் குறியீடாக தாலி கட்டப் படுவதாகக் கூறுவர். கணவனது உழைப்பினால் உருவாக்கப்படும் தாலிக்கு மகத்துவம் அதிகம்.

தாலி திருமணமான பெண்ணிற்கு வேலி. காலில் மெட்டியும் கழுத்தில் தாலியும் இவள் திருமணமானவள் என்பதைக்காட்டும் அறிகுறிகளாகும். இவ்விரண்டையும் பார்த்தவர்கள் பிறன்மனை நோக்காப் பேராண்மையர்களாகத் திகழ்ந்தனர். மணமானவள் என்பதைக்காட்டும் மங்கல அணியாகும் தாலி.

அந்தத் தாலிக் கயிறு பெண்ணின் கழுத்தில் இருக்கும் வரை பூவும் பொட்டும் அலஙுக்குச் சொந்தம். 'மங்கல மடந்தையர்' என்றே அவளை அழைப்பர். அது அவள் கழுத்தில் இருக்கும் வரை, ஒருவரது இல்லத்தில் நடைபெறும் அனைத்துச் சுப நிகழ்வுகளிலும் அவளுக்கு முன்னுரிமை தரப்படும்.

இன்றும் மகனோ கணவனோ வெளியில் புறப்படும்போது மங்கலப்பெண் எதிரில் வந்தால் சுபசகுனம் என்றும் கருதப்படுகிறது. அதேசமயம் பூவும் பொட்டுமிழந்த பெண் எதிரில் வந்தால் சற்றுப் பொறுத்துப் போகும்படியும், உள்ளேசென்று நீர் அருந்திவிட்டுச் செல்லும்படியும் கூறும் வழக்கம்(சகுனம் பார்க்கும் வழக்கம்)இன்றும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

மங்கல அணியன்றி பிறிதணி அணியாதவர்களாக அக்காலத்தில் திருமணமான பெண்கள் இருந்தனர். தற்காத்து ,தற்கொண்டானைப் பேணும் மனைவி தன் கணவனுக்கு ஏதேனும் நோய்வந்தாலும் கணவனது உடல்

நோயைப்போக்க மருத்துவச் சிலவிற்காக தன் கழுத்தில் கட்டிய தாலிப் பொன்னை அடகு வைத்தாவது(பொன்னிற்குப் பதில் மஞ்சள் கிழங்கைக் கட்டிக்கொண்டு) கணவனது உயிரைக் காப்பாற்றத் துடிக்கும் எத்தனையோ மனைவிமார்களை இன்றும் கிராமப் புறங்களில் காணலாம். கோவிலுக்குச் சென்றாலும் பிரசாதமாகக் கொடுக்கப்படும் மஞ்சள் குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொள்வதோடு தன் தாலியில் இடும் வழக்கத்தையும் காண்கிறோம்.

சிலசமயங்களில் தாலிக்கயிறு நைந்து அறுந்து விட்டாலும் கணவன் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என வருந்தி தாலிபாக்கியம் தரும்படி இறைவனிடத்தில் வேண்டுவதையும் காண்கிறோம்.

மனைவி நாணம் இல்லாது பொது இடத்தில் உலவினால் கணவன் இருந்தும் என்ன பயன்? அவளால் கணவனுக்குத்தானே இழுக்கு!

கணவன் இறந்தால் ஊரார் பழிச் சொல்லுக்கு நாணி, ‘‘கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்’’ என தன் உயிர் கொண்டு கணவன் உயிர் தேடுவாள் போல உயிர்நீத்த மனைவியை இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

‘‘பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன் மன்பதை உலகில் தென்புலங் காவல் என்முதல் கெடுக’’ என மயங்கி வீழ்ந்து உயிர்நீத்த பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியும் கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் என இணையடி தொழுது உயிர்நீத்ததைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

இராவணன் மாண்டவுடன் அவன் மனைவி மண்டோதரியும் புலம்பி அவன்மேல் விழுந்து உயிர்நீத்ததைக் கம்பராமாயணம் புலப்படுத்துகிறது. கணவன் உடல் எரியூட்டியபோது மனைவியும் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்ததல்லவா!

தாலி இல்லாவிடில் தனக்கு வாழ்வு இல்லை என்று கருதிய தமிழ்ச் சமுதாயத்தில் கணவன் உயிருடன் இருக்கும்போதே தாலிக் கொடியைக் கழட்டி ஆணியில் மாட்டும் மனைவியரை என்ன சொல்வது! வெட்கக் கேடு!

ஆரம்பகாலத்தில் நாணற்புற்களாலும், வேப்பம்பழத்தினாலும் மஞ்சளாலும் கட்டப்பட்ட தாலிவடிவம் ,பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் கட்டாயமாகி விட்டநிலையில்

,கணவனின் செல்வ வளமை காட்ட வெள்ளியும் தங்கமும் தாலிக்கயிற்றில் இடம்பெறலாயின.

மாற்றத்தை ஏற்காதார் யாருளர்.!..

கோடானுகோடி சிலவு செய்தாலூரம் திருமணத்தின் அடையாளச் சின்னமாக விளங்குவது தாலி கட்டும் சடங்கே! திருமணச் சடங்கின்போது மணமேடையில் மணமகன் மணமகள் கழுத்தில் மங்கலச் சூத்திரத்தை முடிக்கும் போது குருமார்கள் உரத்த குரலில் மந்திரம் முழங்க,மங்கல வாத்தியங்கள் பெருத்த அளவில் இசைக்க,மங்கல மடந்தையர் வாழ்த்துப் பாடல் இசைக்கப் படுவதைக் காண்கிறோம்..

அச்சமயத்தில் சிலர் கூறும் தீய சொற்கள் அமங்கலச் சொற்கள் மணமக்கள் காதுகளில் விழக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு நிகழ்த்தப் படுகிறது. திருமணத்திற்கு வந்த அனைவரின் மனமும் ஒரேமாதிரியாக இருக்கும் எனச் சொல்ல முடியுமா? தற்காலத்தில் திருமண அரசாங்கச் சான்றிதழ் பெறவும் தாலி அணிவிக்கும் சடங்கு ஒரு சாட்சியமாகத் தேவைப்படுகிறது.

எனவே பண்டைக்காலம் முதல் வழிவழியாக வரும் தாலிகட்டும் மரபை, முன்னோர் கடைபிடித்த பழக்க வழக்கங்களை முற்றிலும் தவிர்த்தல் கூடாது. நாகரிகத்தின் பெயரால், பிறநாட்டாருடன் கொண்ட தொடர்பால், பழகும் நிலையால் திருமணத்திற்குப் பிறகு பெண்கள் தாலிக்கயிறைக் கழட்டி ஆணியில் மாட்டும் நிலையையும், பீரோவில் வைத்துப் பூட்டும் நிலையையும் இன்று காணமுடிகிறது. பிறருடைய இல்லச் சுப நிகழ்ச்சிகளுக்குக் கணவனுடன் செல்லும் நிலை ஏற்படும்போது மட்டும் பிற அணிகலன்களுடன் தாலிக்கொடியும் கழுத்தில் ஏறி அழகுச் சாதனம்போல் அணிந்து கொண்டு செல்லும் மனைவியரையும் பார்க்கிறோம்.

இன்றும் சில குடும்பங்களில் வேறுபட்ட சமயத்தினருடனும், வேறு சாதியினருடனும் திருமணமாகும் நிலை ஏற்படும் போதும் பெண் வேறுபட்ட சமய/சாதியைச் சேர்ந்தவளாகி விட்டால், பெண்வீட்டார் வழக்கப்படி அவளது பெற்றோர் செய்து கொடுத்த திருமாங்கல்யத்தில் (பொன்தாலியில்) அவர்கள் சமயச்சின்னம் பொறிக்கப் பட்டிருந்ததைக் கழட்டி வைக்கச் செய்யும்

(திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்கு வந்து சில காலம் கழித்து) மாமியார்களையும் பார்க்க்கிறோம்.

(இரண்டு வீட்டார்களும் தனித்தனியாக தாலி வாங்கிக் கட்டச் செய்வதனால் வரும் விளைவு) இரண்டு மங்கல அணிகள் கட்டினாலும், மாமியார்காரி மருமகளிடம் தங்களது சமயச்சின்னம் பொறிக்கப்பட்ட மங்கல அணியைக் கழட்டி வைக்கச் சொல்லலாமே!

மங்கல அணிக்கு முக்கியத்துவம் கொடுத்த தமிழர் பண்பாட்டில் வந்தவர்கள் மங்கல அணியைக் கழட்டி வைக்கச் சொல்லுவதே பாபம்!

தற்செயலாகத் தாலிக்கயிறு நைந்து அறுந்தால் கூட கண்ணீர் வடிக்கும் மனைவிமார்கள் இருந்த நாட்டில் கணவன் உயிருக்குப் போராடும் நிலையில் தனக்குத் தாலி பாக்கியம் தரும்படி இறைவனிடம் வேண்டும் மனைவிமார்கள் நிறைந்த நாட்டில் நாகரிக வனிதையர் மங்கல அணியைக் கழட்டித் திரிவது அமங்கலமாகத் தோன்றவில்லையா?

இதற்குத்தானா பெண்வீட்டார் நல்ல முகூர்த்தநேரம் பார்த்தும், பல இலட்சக் கணக்கில் சிலவு செய்தும் ஆடம்பரமாகத் திருமணம் செய்து வைக்கிறார்கள்! கழட்டி வைப்பதற்குத் தங்கத் தாலி எதற்கு? பிற உலோகத்தால் தாலி செய்து கட்டிக் கொள்ளலாமே!

நாகரிகப் போர்வையில் திரியும் சில மாமியார்களும் உடந்தையாக இருக்கின்றனரே! நினைத்தால் வேதனையாகத்தான் உள்ளது வருத்தமும் உண்டாகிறது.

தற்காலத்தில் கள்வர்பயம் இருப்பதனால் ஒன்று களவாடப் பட்டாலும் மற்றொன்றை அணிந்து கொள்ள வாய்ப்பாக இருக்குமே எனச் சிலர் சப்பைகட்டு கூறும் மாமியார்களின் நாவினை அறுக்காமல் என்ன செய்வது! உலகம் திருந்தாதா!

தமிழர் மரபு காக்கப் படாதா!

ஒருபெண் மணமானவளா இல்லையா என்பதன் அடையாளம் தாலி! மங்கல அணியே பிறன்மனை நோக்கா ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஆடவர்க்கு உணர்த்தும்!

மணமான பெண்களே! மாமிமார்களே!
சிந்திப்பீர்! செயல்படுவீர் !
தமிழர் மரபைப் போற்றுவீர்! காப்பீர்!
மங்கலம் என்ப மனைமாட்சி!

புதிய வெளியீடுகள்









சந்திரோதயம் பதிப்பகம், மதுரை-18.
போன் 7010997639